15 DEC 1998
மாநகராட்சி ... யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2029 கார்த்திகை 29 செவ்வாய்க்கிழமை (15-12-1998) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:16

# வன்னியில் ஒபடகே கரிகாலனுடன் பேச்சு

## விவரம் வெளியாகவில்லை

கொழும்பு, டிசெம்பர் 15

கடந்த வார இறுதியில் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்துக்குச் சென்ற வடமாகாண மீள்குடியேற்ற, புனர்வாழ்வு, புனர்நிர்மாண அதிகார சபையின் தலைவர் என். கே. ஒபடகே அங்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களில் ஒருவரான கரிகாலனுடன் விரிவாகப் பேச்சு நடத்தியதாகக் கொழும்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும் அவர் என்ன பேசினார் என்பது குறித்து இரகசியம் பேணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்தின் நிலைமைகளை நேரில் கண்டறிவதற்காக, அரசுப் பிரதிநிதியாக அங்கு சென்ற என்.கே. ஒபடகே தமது அவதானங்கள் அடங்கிய விரிவான அறிக்கை ஒன்றை ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்க இருந்ததாக ஒரு தகவல் தெரிவித்தது.

எனினும் —

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்தில் புலிகளின் பிரமுகர்களைத் தான் சந்தித்தது குறித்தோ —

அப்பேச்சுக்களின் விவரம் குறித்தோ—

அவர் தகவல் எதனையும் கசிய விடவில்லை என்றுதெரிவிக்கப்படுகின்றது.

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னி மீது விதிக்கப்பட்டுள்ள சில தடைகளை நீக்குவதாக ஒபடகே மூலம் தகவல் தெரிவித்து, சில சமிக்ஞைகளை அரசு புலிகளுக்குத் தெரியப்படுத்தியிருக்கக் கூடும் என்று ஊகம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். மாநகர சபைக் கூட்டத்துக்காக கூட்டணி உறுப்பினர் யாழ். வருகை

யாழ்ப்பாணம், டிசெ. 15

யாழ். மாநகர சபையின் வரவு செலவுத்திட்டக் கூட்டம் இவ் வாரம் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக கொழும்பிலிருந்து யாழ். மாநகர சபையின் தமிழர் விடுதலைக் கூட்டணி பிரதிநிதிகள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர்.

யாழ்,நகர முன்னாள் மேயரின் கொலைக்குப் பின் நடைபெறும் மூன்றாவது கூட்டம் இதுவாகும். இக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் புதிய உறுப்பினர் ஒருவர் பதவியேற்கவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. பாதுகாப்புக் காரணங்களுக்காக கூட்டம் நடைபெறும் இடம் மற்றும் காலம் போன்றவை அறிவிக்கப்படவில்லை.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக தமிழர் விடு

(10ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டணி அலுவலகம் மீது கிரனேட் வீசப்பட்டதாம்

## படைத் தரப்பில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 15

கடந்த சனிக்கிழமை இரவு 8.30 மணியளவில் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்துக்கு அருகில் வெடித்த கிரனேட் பாதுகாப்பு கடமையில் இருந்த படையினரிடமிருந்து தவறி விழுந்து வெடித்தது அல்லவென்றும் —

வெளியில் இருந்து வீசப்பட்ட குண்டே அது என்றும் —

யாழ். நகரப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

கூட்டணி அலுவலகத்தின் மேல் மாடியில் இருந்த படையினரின் கிரனேட்டே அருகில் உள்ள வளவுக்குள் வீழ்ந்து வெடித்தது என்றும் —

இதனால் ஏதும் சேதம் ஏற்

(10ஆம் பக்கம் பார்க்க)

# எழுதுநர் சேவைகளுக்கு ஆள்சேர்ப்புப் பரீட்சை

## விண்ணப்பிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.15

அரச சேவையில் உள்ள எழுதுநர் சேவைகளுக்கும் அதனோடிணைந்த சேவைகளுக்கும் ஆள்சேர்ப்பதற்கான பொதுப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன,

பொது எழுதுநர் சேவை, சிறாப்பர் சேவை, கணக்குப் பதியுநர் சேவை, களஞ்சியக் காப்பாளர் சேவை ஆகிய இணைந்த சேவைகளுக்கும்—

சுகாதார எழுதுநர் சேவை, ரயில்வே எழுதுநர் சேவை, ரயில்வே நேரம் பதியுநர்— எழுதுநர் சேவை, ரயில் நிலைய அதிபர் (தரம் 2) நீதித்துறை எழுதுநர் சேவை ஆகிய வரையறுக்கப்பட்ட சேவைகளுக்கும் —

(10ஆம் பக்கம் பார்க்க)



அப்ப மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் எண்டு சொல்லுங்கோ......!

# தாக்குதல் முறியடிப்பு என அறிவிப்பு

மட்டக்களப்பு, டிசெ. 15

மட்டக்களப்பு மாஞ்சோலை பொலீஸ் காவல் நிலையம் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் முறியடிக்கப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தாக்குதலில் பொலீ

(10 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் நீர்மூழ்கி என நினைத்து திமிங்கிலத்தை தாக்கிய படையினர்

## மன்னார் கடலில் சம்பவம்

கொழும்பு, டிசெ. 15

விடுதலைப் புலிகளின் நீர்மூழ்கிக் கப்பல் என நினைத்து கடலில் சென்று கொண்டிருந்த திமிங்கிலம் ஒன்றின் மீது கடற்படையினர் சரமாரியாகத் தாக்குதல் நடத்தினர்.

இந்தச் சம்பவம் மன்னார் கடலில் அண்மையில் இடம்பெற்றிருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

நள்ளிரவில் 'ராடரில்' தெரிந்த விம்பங்களை வைத்துக் கொண்டு, அதனை நெருங்கிய கடற்படையினர் சரமாரியாகச் சுட்டனர் என்றும்—

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வட்டுக்கோட்டை கானான்

# ஜெப ஆலய விசுவாசி மீது படுக்கையில் கத்தி வெட்டு

யாழ்ப்பாணம், டிசெ.15

வட்டுக்கோட்டை கானான் ஜெப ஆலய விசுவாசி ஒருவர் நேற்றுக் காலை ஆலயத்தில் அவரது படுக்கையில் வைத்து கத்தி வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார்.

ஜெப ஆலய விசுவாசியான இருபாலையைச் சேர்ந்த இராமலிங்கம் பத்மநாதன் (வயது 57) என்பவரே கத்தி வெட்டுக்கு இலக்கானார்.

இவரது வலது காதின்பின் புறத்தில் ஆழமான வெட்டுக் காயம் காணப்பட்டது. அவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

15 வருடகாலமாக விசுவாசியாக இருந்து வரும் இவர் தேவாலயத்தின் அருகில் உள்ள வீடு ஒன்றிலேயே இரவு வேளைகளில் தங்குவது வழக்கம் என்றும் —

சம்பவதினம் தேவாலய போதகர் இருபாலையில் உள்ளகானான் ஜெப ஆலயத்துக்குச் சென்றிருந்ததால் ஆலயத்தில் இருந்த புனித சகோதரிகளின் பாதுகாப்புக் கருதி அவர் அங்கு சென்று போதகரின் படுக்கை அறையில் தங்கியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அங்கு வைத்தே நேற்றுக் காலை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தம்பலகமத்தில் பொலீஸார்

# கொக்குக்கு வைத்த வேட்டு சிறுவன் உயிரைபறித்தது

மட்டக்களப்பு, டிசெ.15

தம்பலகமம் சிப்பித்திடல் பகுதியில் நேற்று முன்தினம் பொலீஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு தவறுதலாக இலக்கான சிறுவன் ஒருவன் ஆஸ்பத்திரியில் உயிரிழந்தான்.

கொக்கு சுடுவதில் ஈடுபட்டிருந்த பொலீஸாரின் வேட்டினாலேயே இச்சிறுவன் தலையில் பலத்த காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆபத்தான கட்டத்தில் திருமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அச்சிறுவன் நேற்று முன்தினம் நள்ளிரவு அங்கு உயிரிழந்தான்.

## ஆசிய விளையாட்டில்

# 2 தங்கப் பதக்கங்களை இலங்கை வென்றது

கொழும்பு டிசெ. 15

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொககில் நடைபெற்று வரும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் ஓட்டப் பந்தய நிகழ்வுகளில் இலங்கை இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றுள்ளது.

இலங்கையின் தடகளவீரர்களான தமயந்தி தர்ஷாவும் சுகத்திலகரட்னவும் முறையே ஆண்கள், பெண்களுக்கான நானூறு மீற்றர் ஓட்டப்பந்தயங்களில் தங்கப் பதக்கங்களை வென்றனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கப்பல் டிக்கெட் பெற பயணிகள் முண்டியடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.15

காங்கேசன்துறையிலிருந்து நாளை திருகோணமலை நோக்கிப் புறப்படவிருக்கும் 'லங்கா முடித்த' கப்பலில் பயணம் செய்வதற்கு 'டிக்கெட்' பதிவு செய்வதற்காக நூற்றுக் கணக்கான பயணிகள் நேற்று அதிகாலை முதல் யாழ். சிவில் நிர்வாக அலுவலகப் பகுதியில் நீண்ட வரிசையில் காத்து நின்றனர்.

பயண அனுமதி கிடைத்தும் பயணம் செய்ய கப்பல் வசதியை எதிர்பார்த்து நீண்ட நாள் காத்திருந்த பலர் எப்படியாவது டிக்கெட் பெற்றுவிட முண்டியடித்ததைக் காண முடிந்தது.

'டிக்கெட்' பெறுவதற்காக தூர இடங்களில் இருந்து வாகனங்களில் வந்திருந்த பலர் டிக்கெட் கிடைக்காமல் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதையும் காண முடிந்

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைச்சிக் கோழிக்கு குடாநாட்டில் தட்டுப்பாடு

யாழ்ப்பாணத்தில் தற்போது இறைச்சிக் கோழிகளுக்கு (புறொயிலர்) கிராக்கி ஏற்பட்டுள்ளது. விமானப் போக்குவரத்து தடைப்பட்டதை தொடர்ந்து கொழும்பில் இருந்து புதிதாக புறொயிலர் கோழிக் குஞ்சுகள் எடுத்து வரப்படாமையே இதற்கான காரணமென்று தெரிவிக்கப்படுகிறது.

கோழிப் பண்ணையாளர்கள் பலரும் ஏற்கனவே விமான மூலம் தருவிக்கப்பட்ட புறொயிலர் கோழிகளையே கையிருப்பு முடியும் வரை விநியோகித்து வருகின்றனர். (ஐ-4)

# தவறிவிட்டது

கப்பலில் வந்து காங்கேசன்துறையில் இருந்து யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் வந்து 13-12-98 இரவு இறங்கிய பொழுது எனது நீலமும் சிவப்பும் கலந்த நிறமுடைய பிரயாண (Bag) பாக் ஒன்று தவறிவிட்டது. அதில் விசேட அடையாள அட்டை, உடுப்புகள், உணவு முத்திரை ஆகிய முக்கியமான ஆவணங்கள் இருந்தன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க் காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

கிருபாலட்சுமி இராசதுரை,
தபாற்கந்தோர் முதலாம் ஒழுங்கை,
கற்குழி, சாவகச்சேரி.

(சி/5796)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ். கிளைத் தலைமையகம்

# வதிரி தோற்பொருள் உற்பத்தித் திட்டம் பயிற்சி பெறுநர்

(6 மாத காலப் பயிற்சி)

மேற்படி பயிற்சி பெறுவதற்காக 18-25 வயதுக்கு இடைப்பட்டோர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தோற் பொருள் உற்பத்தியில் நாட்டமும் ஆரம்ப அறிவும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொடர்ந்து தோற் பொருள் உற்பத்தியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளக்கூடியவராக இருக்க வேண்டும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் 98 - 12 - 24 க்கு முன்னதாக கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல்வேண்டும். இதற்கான நேர்முகப் பரீட்சை புலோலி தெற்கில் அமைந்துள்ள வதிரி தோற் பொருள் உற்பத்தி நிலையத்தில் 98 - 12 - 27 அன்று மு. ப. 9. 00 மணிக்கு நடைபெறும் கல்விச் சான்றிதழ், தோற் பொருள் உற்பத்தி தகைமைச் சான்றிதழ், இரு நற்சான்றுப் பத்திரங்கள், தேசிய அடையாள அட்டை ஆகியவை நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். தனித்தனியாகக் கடிதம் அனுப்பி வைக்கப்படமாட்டாது.

கௌரவ செயலாளர்,
இ. செ. சங்கம்,
யாழ். கிளைத் தலைமையகம்.

37, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/5797)

# சுயதொழில் வாய்ப்புக்கு நிதி

செம்பியன்பற்று, டிசெ. 15

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறும் 15 பேருக்கு சுய தொழில் வாய்ப்பை ஊக்குவிக்கும் பொருட்டு 10ஆயிரம் ரூபா வழங்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு- கிழக்கு மாகாண சபை ஒதுக்கீடு செய்யும் இந்த நிதியைப் பெற்று இவர்கள் ஆடு, மாடு, கோழி வளர்ப்பில் ஈடுபட முடியும்.

இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டதும் இவர்களுக்குரிய மாதாந்த உதவிப்பணம் நிறுத்தப்படும் என மருதங்கேணி உதவி அரசஅதிபர் தெரிவித்தார்.

# சந்நிதியான் ஆச்சிரம பண்ணிசை போட்டி

வடமராட்சி, டிசெ. 15

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்தும் இவ்வாண்டுக்கான மாணவர்களிடையேயான பண்ணிசைப் போட்டி எதிர்வரும் 20 ஆம் திகதி சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆண்டு6 தொடக்கம்11ஆம் ஆண்டு வரை பயிலும் மாணவர்கள் மத்தியில் இப்போட்டி நடத்தப்படும்.

போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்களிடையே அந்தந்த வகுப்பு சமய பாடம் தொடர்பான பொது அறிவு, எழுத்துப் பரீட்சையும் நடத்தப்படும்.

இப்போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு இம் மாதம் 27ஆம் திகதி நடைபெறும் திருவாசக விழாவில் வைத்து பணத்தொகையும், பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.


நாகம்ஸ்
சினிமா
சுன்னாகம்.
30 அடி
அகல வெண் திரையில்
விஜயகாந் (இரு வேடம்)
குஷ்பு,
நடித்த
வீரம் வெளைஞ்ச மண்ணு
தினசரி: 10-30, 2-30
16 ஆம் திகதி முதல்
ரீல்ஸ் வெளியீடு
காதல் கோட்டை
(61336)



ராஜா
டாக்கீஸ்
யாழ்ப்பாணம்.
ரஜனி, மீனா, ரோஜா
ஜனகராஜ், செந்தில்
நடித்த
வீரா
தினசரி
10.30, 2.00
சனி, ஞாயிறு
10-30, 2-00, 5-00
(சி/5711)



லிபேட்டி
தியேட்டர்
அச்சுவேலி.
இன்று முதல்
பிரகாஸ்ராஜ், குஷ்பு,
மணிவண்ணன்
நடித்த
குருபார்வை
அடுத்த வெளியீடு
பார்த்தீபன், ரோஜா
நடித்த
புதுமைப்பித்தன்
தினசரி:- 10-30, 2-30
(பழைய நேரம்)
தொலைபேசி:
070 - 212223
(61225)


# மரண அறிவித்தல்கள்

## சித்தன் சிதம்பரப்பிள்ளை

(வயித்தி)

வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் மண்டைதீவில் வசித்தவரும் தற்போது மூத்தவிநாயகர் வீதி, நல்லூரில் வசித்தவருமாகிய சித்தன் சிதம்பரப்பிள்ளை (வயித்தி) நேற்று (14 - 12 - 98) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் லட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான மாரிமுத்து. சின்னத்தம்பி, சரவணமுத்து, இரத்தினம் மற்றும் சின்னையா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15-12-98) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு (புதிய நேரம்) தகனக் கிரியைக்காக சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. கலாவதி
(பெறாமகள்)

227, மூத்த விநாயகர் வீதி,
நல்லூர் கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(61337)

## நவரட்ணம் றோசலின்

(றோசக்கா)

[ஓய்வுபெற்ற மருத்துவமாது]

நீர்கொழும்பைப் பிறப்பிடமாகவும், தலையாழி நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும்கொண்ட நவரட்ணம் றோசலின் 11- 12- 1998 இல் ஸ்கந்தபுரம் கிளிநொச்சியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரட்ணத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மனோகரன் (சந்திரா), நற்குணராசா (இலங்கை மின்சாரசபை - யாழ்ப்பாணம்), நவமலர், சுகுமார் (கொழும்பு), சுரேஸ்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் அருமைத் தாயாரும், மரிஸ்ரெலா, ராஜகுலேந்திரன், அமலா (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும், உமாகாந்த் (யாழ் பல்கலைக்கழகம்), சிறிகாந்த், ரூபகாந்த் (கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்), யூலியன்சஜீவ் (ஜேர்மனி), ஆதித்தியன் (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் 12- 12- 98 அன்று ஸ்கந்தபுரத்தில் நடைபெற்றது என்பதை அனைவருக்கும் அறியத்தருகிறேன்.

தகவல்:
ந நற்குணராசா
(மகன்)

155, அரசடி றோட்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(கவுக்கா)

(61333)

## கந்தையா சுப்பிரமணியம்

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டம் 93/5 ஆம் இலக்கத்தை வசிப்பிடமாகக் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற தொலைத் தொடர்பு ஊழியர்) நேற்று (14-12-98) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா பொன்னம்மா ஆகியோரின் அன்பு மகனும் சுப்பிரமணியம், காலஞ்சென்ற சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் கனகசபாபதியின் அன்புச் சகோதரரும் இந்திராணி (பிரான்ஸ்), சறோஜினி (பிரான்ஸ்), செல்வராணி, கிருபாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் லாதிஸ், யோகநாதன் (பிரான்ஸ்), மரியநாயகம் (பிரான்ஸ்), வடிவேல் (சொக்கர் கடை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தயோதனன், மதியா மதனி, மதுரா, மதன், கிங்ஸ்லி, லூட்சிகா (பிரான்ஸ்), கிரோஷன், நிரோஷன், ஷாருகா, சுபலக்ஷன் ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (14-12-98) திங்கட்கிழமை நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்;
வடிவேல்
(மருமகன் சொக்கர் கடை)

93/5 இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(61339)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி அந்தியேட்டி அழைப்பு

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
சந்தியாப்பிள்ளை குணரத்தினம்
(K. K. S. சிமெந்து ஆலை)

தோற்றம்: 16 - 02 - 1942 (தெல்லிப்பழை)
மறைவு: 16 - 11 - 1998 (கொக்குவில்)



அமரர்
குணரத்தினம் சசிகரன்

மலர்வு: 03 - 10 - 1974
உதிர்வு: 03 - 10 - 1995

ஊரடங்கு வேளையிலே
உற்ற உறவுகள் உடனிருக்க
உன இதயம் உறங்கியதோ
பிறப்பு என்றால் இறப்பும் இணைந்திருக்கும்
இடைவெளிகள் கூடிக் குறுகும்
உயிர் வாழ்க்கை இப்படித்தான் என்றாலும்
எம் உள்ளம் ஏங்குது உங்கள் பிரிவால்.

அமரரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (15 - 12 - 98) எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்

மருத்துவ பீடம் முன்பாக,
கொக்குவில் கிழக்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 DEC 1998

'பயர்' திரைப்பட சர்ச்சை நீடிப்பு

# உள்ளாடை மட்டும் அணிந்துநின்று சிவசேனையினர் ஆர்ப்பாட்டம்!

மும்பாய், டிசெ. 15

நடிகர் ஒருவரின் வீட்டிற்கு முன்னால் உள்ளாடைகளை மட்டும் அணிந்த நிலையில் வலது சாரி இந்து அடிப்படை வாதக் கட்சியான சிவசேனைக் கட்சியினர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடத்தினர்.

மும்பாயில் உள்ள இந்தி நடிகரான திலீப்குமாரின் வீட்டின் முன்னாலேயே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இந்தியாவில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள 'பயர்' என்ற திரைப்படத்திற்கு ஆதரவாக உயர்நீதி மன்றில் வேட்பு மனுத் தாக்கல் செய்தவர் திலீப்குமார். எனவே அவருக்கு இவ்வாறான செயல் மூலம் தான் விளக்கம் கொடுக்க முடியும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

நூற்றுக்கு மேற்பட்ட சிவசேனைக் கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

இதேவேளை —

புதுடில்லியில் உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானியின் இல்லத்திற்கு வெளியே 'பயர்' திரைப்படம் மீண்டும் திரைப்படத் தணிக்கைக் குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டதை எதிர்த்து இருநூறுக்கும் அதிகமான கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் திரையுலக பிரமுகர்கள் மெழுகுவர்த்திகளை கைகளில் ஏந்தியவாறு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

பெண்களுக்கு இடையேயான தன்னினச் சேர்க்கையை அடிப்படையாகக் கொண்ட 'பயர்' இந்து மதப் பண்பாடுகளுக்கு மாறானது என இக் கட்சி வாதிட்டு வருவது தெரிந்ததே.

(ஐ-ரீ)

# இரு ஜீப்புகள் மோதியதில் இந்தியாவில் 11 பேர் பலி

புதுடில்லி, டிசெ. 15

இந்தியாவின் மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள ஹேய்ட்டி கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில் 11 பேர் உயிரிழந்தனர் 6 பேர் படுகாயங்களுக்கு உள்ளாகினர்.

இரு ஜீப்புகள் ஒன்றுடன் ஒன்று மோதியதனாலேயே இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவர்களில் இருவர் பெண்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

# அசாமில் 26 பேர் கொலை கண்டித்து ஹர்த்தால்

புதுடில்லி, டிசெ. 15

இந்தியாவின் அசாம் மாநிலத்தில் கடந்த சனிக்கிழமை இனந்தெரியாத குழு ஒன்றினால் 26 பேர் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கிறிஸ்தவ இனத்தவர்களின் குழு ஒன்று மேற்படி ஹர்த்தாலை ஒழுங்கு செய்திருந்தது.

அசாம் மாநிலத்தில் மேற்படி இனத்தவர்களால் நடத்தப்படும் முதலாவது ஹர்த்தால் இது எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-7)

(இ-7)

உலக அரங்கில்

# ராஷ்ட்ரிய ஜனதாதள், சமாஜ்வாதி நேற்று லோகசபை முன் மறியல்!

## பெண்களுக்கு 33 சதவீத ஒதுக்கீடுபிரேரணை சபையில்

புதுடில்லி, டிசெ. 15

பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்குவது தொடர்பான சட்ட மூலம் நேற்று மக்களவையில் கொண்டுவரப்பட்ட சமயம் ராஷ்ட்ரிய ஜனதா தள் எம். பிக்களும், சமாஜவாதி எம். பிக்களும் குழப்பம் விளைவித்தனர்.

லோகசபை காலை கூடிய சமயம் லோகசபையின் பிரதான வாசலில் இந்த இரு கட்சிகளின் உறுப்பினர்களும் மறியற் போராட்டம் நடத்தினர்.

பெண்களுக்கான இட ஒதுக்கீட்டு சட்ட மூலத்தில் பின் தங்கியவர்கள், தலித் இனத்தவர்கள், முஸ்லிம்கள் ஆகியோரும் சேர்க்கப்பட வேண்டும் என்று இந்த எம். பிக்கள் கோரிக்கை விடுத்தனர்.

பின்னர் லோகசபை கூடிய போது இந்த இரு கட்சிகளின் எம். பிக்களும் சபையின் மையப்பகுதிக்கு வந்து கூச்சல் எழுப்பினர். திரிணாமூல் காங்கிரஸ் தலைவர் செல்வி மமதா பனர்ஜிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் பெண்களுக்கான 33 சதவீத இட ஒதுக்கீட்டு சட்ட மூலத்தை நிறுத்தி வைக்க வேண்டும் என்றும் இவர்கள் கோஷமிட்டனர்.

சபாநாயகர் பாலயோகி, சபை நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்த மேற்கொண்ட முயற்சிகள் பயன் அற்றுப் போகவே நேற்றுப் பிற்பகல் 1.00மணிவரை சபை நடவடிக்கைகளை ஒத்தி வைத்தார்.

ஒரு மணிக்கு சபை கூடிய சமயம் மீண்டும் இந்த எம். பிக்கள் குழப்பம் விளைவிக்கவே சபை நடவடிக்கைகள் மீண்டும் இரு தடவைகள் ஒத்திவைக்கப்பட்டன.

இந்த சட்ட மூலம் நிறைவேற்றப்படும் பட்சத்தில் மக்களவை மற்றும் மாநில சட்டப் பேரவைகளில் 33 சதவீத இடங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும். இந்த சட்ட மூலத்துக்கு எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சி ஆதரவு தெரிவித்துள்ளது

ஏற்கனவே காங்கிரஸ் கட்சியில் பெண்களுக்கு 33 சதவீத ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

அ.தி மு. கவிலும் 33 சதவீதத்துக்கு சிறிது அதிகரித்த இடம் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. (இ)

## தமிழகத்தில் மழை 123 பேர் பலி

சென்னை, டிசெ. 15

தமிழ்நாட்டில் கடந்த ஒக்ரோபர் மாதம் முதல் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக இதுவரை 123 பேர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் 54 பேர் ஆண்கள், 37பேர் பெண்கள், 32 பேர் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-7)

ஈராக்கில் இருந்து

## ஆயுத கண்காணிப்புக் குழு திடீரென வெளியேறியது

பாக்தாத். டிசெ. 15

ஈராக்கில் நிலைகொண்டிருந்த ஐ. நா. ஆயுதக் கண்காணிப்புக்குழு நேற்று முன்தினம் திடீரென ஈராக்கை விட்டு வெளியேறியது.

இந்தக்குழு வெளியேறியதுக்கான காரணம் எதுவும் இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

இதற்கிடையில் ஆயுதக்கண்காணிப்புக் குழு தனது பணிகளை முடித்துக்கொண்டே வெளியேறியதாக மற்றுமொரு செய்தி தெரிவிக்கின்றது.

இதேவேளை ஆயுதக் கண்காணிப்புக்குழு கடந்த பல மாதங்களாகப் பாக்தாத்தில் தங்கி இருந்து ஆயுதக்கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தது தெரிந்ததே.

## காபூலில் ஷெல் வீச்சு 15பேர் உடல் சிதறிப் பலி

காபூல் டிசெ. 15

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் நேற்று முன்தினம் ஷெல் ஒன்று வீழ்ந்து வெடித்ததில் 15 பேர் உடல் சிதறிப் பலியாகினர். பலர் பலத்த காயங்களுக்கு உள்ளாகினர்.

காபூலுக்கு வடபகுதியில் இயங்கும் அகமத்ஷா மசூத் தலைமையிலான தீவிர வாதிகளின் குழு ஒன்றே மேற்படி ஷெல்லை ஏவியதாகத் தெரிவிக்கப்பட்டது.

காபூல் நகரில் மக்கள் நெருக்கமாக இருக்கும் பகுதியிலேயே இந்த ஷெல் வீழ்ந்து வெடித்ததாகவும் —

இதனால் அப்பகுதியில் உள்ள வீடுகள் மற்றும் தொழிற்சாலைகள் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை காபூல் நகரில் உள்ள ஹோட்டல் ஒன்றில் நேற்று முன்தினம் இரவு குண்டு ஒன்று வெடித்ததில் 5 பேர் பலியாகினர் எனவும், 12 பேர் காயமடைந்தனர் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. [இ-7]

# கிளின்ரன் மீதானகுற்றப் பிரேரணை வியாழனன்று அமெரிக்ககீழ்சபையில்

வாஷிங்ரன். டிசெ.15

வெள்ளை மாளிகையின் முன்னாள் பணிப்பெண் மொனிக்கா லுவின்ஸ்கியுடன் முறைகேடான பாலியல் உறவுகொண்ட விவகாரத்தில் பொய்ச் சாட்சி கூறினார் என்ற குற்றச் சாட்டின் பேரில் ஜனாதிபதி பில் கிளின்ரன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றப் பிரேரணை வியாழக்கிழமை அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையில் வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளது.

பிரதிநிதிகள் சபையின் நீதி பரிபாலனக்குழு கடந்த சனியன்று கூடி ஜனாதிபதி கிளின்ரன் மீதான குற்றப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தது.

இதனையடுத்தே இந்த விவகாரம் பிரதிநிதிகள் சபைக்கு வருகிறது,

பிரதிநிதிகள் சபை இதனை சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றும் பட்சத்தில் இது மேல் சபையான செனேட் சபையில்வாக்கெடுப்புக்கு விடப்பட்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும்.

சமீபத்தில் அமெரிக்க மாநிலங்களில் நடைபெற்ற இடைக்காலத் தேர்தல்களில் பிரதிநிதிகள் சபையில் குடியரசுக் கட்சியின் பலம் சிறிது குறைந்தபோதிலும் குடியரசுக் கட்சியே தொடர்ந்து பெரும்பான்மைக் கட்சியாக இருந்து வருகிறது.

இதனால் பிரதிநிதிகள் சபையில் இந்தத் தீர்மானம் பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்றப்படும் என்றே நம்பப்படுகிறது.

பிரதிநிதிகள் சபையில் நிறைவேறினாலும் செனேட் சபை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் [illegible] களிப்பது இன்றும் கேள்விக் குறியாகவே இருந்து வருகிறது.

இதற்கிடையில் ஜெருசலத்



தில் நேற்று செய்தியாளர்களை [illegible] த்தில் [illegible] ஜனாதிபதி பில் கிளின்ரன் தம்மீதான குற்றப் பிரேரணை சம்பந்தமாக பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களின் ஆதரவைத்தாம் நாடப் போவதில்லை என்று கூறினார்.

அத்தோடு மொனிக்கா லுவின்ஸ்கியுடனான வழக்கில் தாம் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டு பின்னர் பொய் சொன்னதாகக் கூறப்படும் குற்றச்சாட்டையும் கிளின்ரன் மறுத்துள்ளார்.

இதேவேளை பில் கிளின்ரன் மீதான குற்றப்பிரேரணைக்கு சிபார்சு செய்த நாடாளுமன்ற நீதி பரிபாலனக் குழுவின் தலைவர் ஹென்ரி ஹைடி கிளின்ரனைப் பதவி விலகுமாறு கேட்டுள்ளதுடன் அது கிளின்ரனின் வீரச் செயலைக் குறித்து நிற்கும் எனவும்கூறியுள்ளார்.

(இ-7)

## ஈரானிய எழுத்தாளர் கொலை

தெஹ்ரான், டிசெ. 15

ஈரானின் முதன்மை வாய்ந்த எழுத்தாளரும். மொழி பெயர்ப்பாளருமான முகமது பௌனியாத்தந் என்பவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை இனம் தெரியாதவர்களால் கடத்தப்பட்ட இவர், தெஹ்ரானில் கழுத்து நெரிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலங்களில் தாராளப் போக்குடைய அறிஞர்கள் கடத்தப்படுவதும் கொலை செய்யப்படுவதும் ஈரானில் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

தனபாலசிங்கம் முரளீஸ்வர பவன் என்பவருடைய தேசிய, விசேட அடையாள அட்டைகள் இரண்டும் 6-12-98 அன்று யாழ். நகரப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இலக்கம் 6, யாழ், பஸ் நிலைய விஜயா கூல்பாரில் ஒப்படைத்து உதவவும்
(61312)

செல்வி கனகசபை அருளரசி, திருமதி குலசேகரம் அருளரசி ஆகிய எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள் (605510434V) யாழ்நகரில் தவறிவிட்டன, கண்டெடுத்தவர்கள் தயவு செய்து விலைமதிப்பீட்டுத் திணைக்களம் இல. 148, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும்.
(61328)

### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள் இடம்பெயர்வின் கதை. வாங்கி வெளிநாடுகளில் உள்ள உங்கள் நண்பர்களுக்கும், உறவினருக்கும் அனுப்புங்கள். இங்கு நடந்ததை அவர்களும் அறியட்டும். ரூபா 50 மட்டுமே.
(61305)

## மிதிவண்டிகள் அன்பளிப்பு

வலி. கிழக்கு, டிசெ. 15
யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் கடமையாற்றும் 17 தொண்டர்களுக்கு யுனிசெவ் நிறுவனத்தினால் மிதிவண்டிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யுனிசெவ் நிறுவனத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் 17 மிதிவண்டிகளையும் வழங்கினார். (இ-180)

## புதிய படகைச் சேவையில் இணைக்க முடிவு

நெடுந்தீவு, டிசெ. 15
நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கம் விரைவில் மேலும் ஒரு மோட்டார் படகைத் தனது கடல் போக்குவரத்துச் சேவையில் இணைத்துக் கொள்ள உள்ளதாகவும் —

15 லட்சம் ரூபா செலவில் புதிய படகுக்கான கட்டுமானப்பணிகள் இடம்பெற்று வருவதாகவும் மேற்படி பல நோ. கூ. சங்கத் தலைவர் எஸ். கோபாலசிங்கம் தெரிவித்தார். (இ-111)

## மரக்கன்றுகள் வழங்கப்பட்டன

தென்மராட்சி, டிசெ. 15
பளைப் பிரதேச செயலகத்தின் இந்த வருடத்துக்குரிய பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை ஒதுக்கீட்டில் விவசாயத் திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட மா, பலாக் கன்றுகள் பிரதேசத்தில் உள்ள அரச நிறுவனங்கள், கூட்டுறவு அலுவலகங்கள், பாடசாலைகள், ஆலயங்கள் பொது அமைப்புகள் ஆகியவற்றுக்கு அண்மையில் வழங்கப்பட்டன.

பழமரக்கன்றுகள் கொள்வனவு செய்யவென பிரதேச செயலகத்தினால் 25 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
(இ-117)

## யாழ். மாநகர சபைப் பகுதியில்
# மலசல கழிவுகளை அகற்ற வடிகால் அமைக்கயோசனை

யாழ்ப்பாணம், டிசெ. 15
யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட பகுதியில் மலசல கழிவுகளை அகற்ற வடிகால் அமைக்கும் திட்டம் குறித்து கொழும்பில் நடந்த ஆய்வுப் பட்டறையில் ஆராயப் பட்டது.

யாழ் மாவட்டத்தில் நிலத்தடி நீரைப் பாதுகாப்பது தொடர்பாக ஆராய்வதற்காகக கடந்த வாரம் கொழும்பில் ஆய்வுப்பட்டறை ஒன்று நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தில் நிலத்தடி நீர்மாசடைதல், உவராகுதல் தொடர்பாக இந்த ஆய்வுப்பட்டறையில் ஆராயப்பட்ட போது யாழ். மாநகரசபைப் பகுதியில் உள்ள மலசல கூடங்களில் சேரும் கழிவுகளைவடிகால் அமைத்து கடலுக்குள் அகற்றும் திட்டங் குறித்துப் பிரஸ்தாபிக்கப் பட்டது.

வடமாகாண மீள் குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் நடந்த இந்த ஆய்வுப் பட்டறையில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம், ஐ. நா. அபிவிருத்தித் திட்டம், ஐரோப்பிய சமூக தூதரகம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

யாழ். மாநகரசபை ஆணையாளர் வி. பி. பாலசிங்கம், வடக்கு — கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் ஜி. கிருஷ்ணமூர்த்தி, வடக்கு—கிழக்கு நீர்கால் வடிகால்சபை பிரதிப் பொது முகாமையாளர் எஸ். நாகராஜேஸ்வரன் மற்றும் கொழும்பு, பேராதனைப் பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த நீரியல் நிபுணர்கள் ஆகியோரும் பங்குபற்றி தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

விவசாயம் மற்றும் தேவைகளுக்கு நீர் கூடுதலாகப் பாவிப்பதால் நிலத்தடி நீர் உவராகுதல், மாசடைதல் ஆகியன அதிகரிப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த நிலையைச் சீராக்க எடுக்கவேண்டிய உடன் நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் உள்ள குளங்களை ஆழமாக்கி நீரைத் தேக்கிவைக்க வேண்டிய அவசியம் குறித்து சுட்டிக் காட்டப்பட்ட சமயம், இந்தப் பணிக்கு உதவ நோர்வே அரசாங்கம் முன் வந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## வங்கிக் கடன்

வலி. தென்மேற்கு, டிசெ. 15
மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையில் கடந்த சனிக்கிழமை முதல் நெற்செய்கைக்கான கடனாக 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகிறது.

இதேவேளை — மேற்படி கடனுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு வங்கி கடனை வழங்குவதில் கடுமையான நிபந்தனைகளை விதித்து வருவதாக வலி. தென் மேற்குப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் அதிகாரி வி. கனகரத்தினத்திடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் வங்கி இரண்டரை ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை பண்ணும் விவசாயிகளுக்கே ரூபா 10 ஆயிரம் கடன் வழங்குகிறது.
(இ-185)

## மருதங்கேணிப் பகுதியில் பரீட்சை நிலையம் இல்லை

செம்பியன்பற்று. டிசெ. 15
வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கல்விக் கோட்டத்தில் இம்முறை ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சைகள் நடைபெறவில்லை.

இப்பகுதி மாணவர்களுக்குரிய பரீட்சை நிலையங்கள் வடமராட்சி - புலோலிப் பகுதிக்கு மாற்றப்பட்டு அப்பகுதியிலேயே பரீட்சை எழுதுமாறு மாணவர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் இப்பகுதியில் பரீட்சைகள் நடத்தப்பட்டன. சென்ற வருடம் இப்பகுதியில் பரீட்சையை நடத்த பாதுகாப்பு அனுமதி கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப் பட்டது.

பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு வல்லிபுரம் சோதனைச் சாவடியில் வைத்து விசேட பாஸ் வழங்கப்பட்டுள்ளது. (இ-36)

## பக்தர்களுக்கு காப்புறுதி

கொழும்பு, டிசெ. 15
பிரதான வணக்கத் தலங்களுக்கு பாதயாத்திரை செல்லும் பக்தர்கள் விபத்துக்குள்ளாகும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு இழப்பீடு வழங்கக் கூடிய வகையில் புதிய காப்புறுதித் திட்டம் ஒன்றை வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நடைமுறைப்படுத்தஉள்ளது.

இலங்கையில் சிவனொளி பாதமலை, தலதா மாளிகை, கதிர்காமம் உட்பட பிரதான வணக்கத் தலங்களுக்கு பாதயாத்திரை செல்லும் பக்தர்களின் நலன்களைப் பேணும் நோக்கில் இந்தக் காப்புறுதித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

வணக்கத் தலங்களுக்குச் செல்லும் பக்தர்கள் இந்தக் காப்புறுதித் திட்டத்தில் இணைந்து கொண்டால் அவர்கள் பாதயாத்திரை செல்லும் வேளையில் எதிர்பாராத வகையில் ஏற்படும் விபத்துக்களுக்கு காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 50 ஆயிரம் ரூபா வரையில் இழப்பீடு வழங்கும் என்று தெரிவிக்கப் பட்டது.
(இ-9)

## ஆசிய விளையாட்டுப் போட்டி இலங்கை வீரர் சாதனை

கொழும்பு, டிசெ. 15
ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை வீரர்கள் சிலர் பங்குபற்றிய போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளனர்:

பெண்களுக்கான 400மீற்றர் அரை இறுதிப் போட்டியில் தமயந்தி தர்ஷா முதலாவதாக வந்து இறுதி ஆட்டத்தில் பங்குபற்றும் தகுதியைப் பெற்றுள்ளார்.

ஆண்களுக்கான 400மீற்றர் அரை இறுதிப் போட்டியில் சுகத் திலகரட்ண முதலாவதாக வந்து இறுதிப்போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சுஸந்திகா ஜெயசிங்க 100 மீற்றர் பூர்வாங்கப் போட்டியில் முதலாவதாக வந்துள்ளார்.

21 கிலோ மீற்றர் வேக நடைப் போட்டியில் நயானந்த ஆறாவதாக வந்துள்ளார். (இ-9)

## வை. பி. டி சில்வா மறைவு புளொட் அமைப்பு அஞ்சலி

இதயசுத்தியுடன் நேர்மையான கொள்கையுடன் வாழ்ந்த வை. பி. டி சில்வா சந்தர்ப்பவாத அரசியலில் ஈடுபடவில்லை.

இப்படி புளொட் அமைப்பின் உப தலைவர் என். மாணிக்கதாசன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மரணமான இலங்கை மக்கள் கட்சியின் தலைவரும், வாணிப, உணவு பிரதி அமைச்சருமான வை. பி. டி சில்வாவின் இறுதிச் சடங்கில் ஆற்றிய இரங்கல் உரையிலேயே இப்படி அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் பேசுகையில் அவர் கூறியதாவது:–

இலங்கை மக்கள் கட்சியின் தலைவரும், வாணிப, உணவுப் பிரதி அமைச்சருமான வை.பி. டி சில்வாதமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகவும். அவர்களின் உரிமைக்காகவும் முன்னின்றவர்.

அத்தோடு எமது அமைப்பின் தலைவர் அமரர் தோழர் உமா மகேஸ்வரனுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.

ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சியில் தனது அரசியல் வாழ்வை ஆரம்பித்தவை.பி.டி சில்வா அதன்பின்னர் தோழர் விஜயகுமாரணதுங்கவுடன் இணைந்து மக்கள் கட்சியை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாகத் திகழ்ந்தார்.

இவர் தமது வாழ்வினைத் தொழிற் சங்கத்திற்காகவும், அரசியலுக்காகவும் அர்ப்பணித்தவர். இதயசுத்தியுடன், நேர்மையாக, கொள்கைக்காக வாழ்ந்தவர். ஒரு போதும் சந்தர்ப்பவாத அரசியலில் இவர் ஈடுபடவில்லை.

அனைத்துத் தொழிலாளர் போராட்டங்களிலும் தலைமைத்துவப் பாத்திரத்தை வழங்கி மனிதாபிமானத்துடனும், தோழமையுடனும் இவர் நடந்துகொண்டார். என்றுமே இவர் தலைமைத்துவத்தை நாடிச் செல்லவில்லை. அவரை நாடியே தலைமைத்துவம் வந்தது.

நெருக்கடியான காலகட்டங்களில் மிகப் பொறுமையாக இருந்து வெற்றி கண்ட மனிதநேயம் மிக்க மனிதர் வை. பி. டி சில்வா.

விஜயகுமாரணதுங்க படுகொலை செய்யப்பட்ட பின்பு மக்கள் கட்சி முகங்கொடுத்த துன்பகரமான சூழ்நிலையின் போது சவால்களுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் கலங்காது துணிவுடன் முன்னின்றவர் வை. பி. டி சில்வா.

சிங்கள கடும் போக்காளர்களின் அச்சுறுத்தல்கள் வந்த போதும் துணிவுடன் இன்று நடக்கும் இனத்துவ யுத்தத்துக்குச் சமாதான முறையில் அரசியற் தீர்வினைக் காணச் சளைக்காது அரும்பாடுபட்டவர்.

இனப்பிரச்சினைக்குத்தீர்வு காணச் சமாதானப் பேச்சுவார்த்தைக்குப் பலர் முன்வந்தாலும் 1985 இல் விஜயகுமாரணதுங்கவுடன் யாழ்ப்பாணம் சென்று தமிழ் மக்களின்பிரச்சினை தொடர்பாக தமிழ்மக்களின் விருப்பு, வெறுப்புக்களையும் அறிந்து கொண்டவர் வை. பி. டி சில்வா.

மனிதத்துவம் மிக்க மார்க்ஸ், லெனின் சித்தாந்தத்தை மேற்கொண்டு சமாதான இலங்கையைக் கட்டி எழுப்புவதே இவரது இலட்சியமாக இருந்தது. தோழர் விஜயகுமாரணதுங்கவுக்கும் தோழர் வை பி. டி சில்வாவுக்கும் தாம் பிரார்த்தனை செய்த இலட்சிய உலகத்தைக் காணக் கொடுத்து வைக்கவில்லை. அவர்களைப் போல் துன்பமுறும் எங்கள் அனைவரினது இலட்சியமும் அதுவே ஆகும்.

என்றாவது ஒருநாள் இந்த இலட்சியங்கள் வெற்றி பெறும். அதுவரை தோழர் வை.பி டி சில்வாஅவர்களின் கருத்துக்களும், வழிகாட்டலும் எமக்குத் துணிவைத் தரும்.

இவரது மறைவு சிங்கள மக்களுக்கு மாத்திரமல்ல தமிழ் மக்களுக்கும் தாங்க முடியாத வேதனையைத் தருகின்றது.

இப்படி அவர் தெரிவித்தார்.

(இ-3-7)


## நன்றி நவிலல்

### திரு. திருமதி சந்திரமோகன்

06 - 12 - 98 அன்று வண்ணார்பண்ணையில் நடைபெற்ற எமது புத்திரன் சந்திரமோகனுடைய திருமண வைபவத்தில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தியும், அன்பளிப்புகளை வழங்கியும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்த உறவினர்கள், அன்பர்களுக்கும் புதுமணத் தம்பதிகளின் சார்பில் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

[illegible]

உடுப்பிட்டி. (61327)



குறைந்த கட்டணத்தில்
உள்நாட்டு / வெளிநாட்டு } தொலைபேசிச் சேவை
(FAX) பக்ஸ் சேவை போட்டோக் கொப்பி
அடையாள அட்டை கவரிடுதல்
இவற்றிற்கு நாடுங்கள்:

ஷண்முகா

இல. 6 5 (185), பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
(முன்னர் அருணாசலம் சண்முகம் மகாதேவா நகைக்கடை அடைவு கடை இருந்த இடம்)

T. P. / FAX } No. 2456

(61326)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத் தலைமையில் இந்த வாரம் மாற்றங்கள்!

கொழும்பு, டிசெ. 15

ஸ்ரீலங்கா இராணுவத் தலைமையில் இவ்வாரம் பெரிய மாற்றங்கள் இடம்பெறும் என்று உயர் மட்ட இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றொஹான் தலுவத்த இவ்வாரம் ஓய்வு பெற்றுச் செல்லக் கூடும் என்றும் —

புதிய இராணுவத் தளபதியாக மேஜர்ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரிய பதவியேற்கலாம் என்றும் — எதிர்பார்க்கப்படுவதாகக் கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

லெப்டினன்ட் ஜெனரல் றொஹான் தலுவத்த கூட்டுப் படைத் தலைமையகத் தளபதியாகப் பதவி ஏற்பார் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் இது வரை உத்தியோக பூர்வமாக அவருக்கு இதுபற்றி அறிவிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை — புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரிய நாளை புதன் பதவியேற்பார் என்று செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

(இ-3-21)

# ஒன்றுபட்டுத் தீர்வுகாண அரியதோர் சந்தர்ப்பம்

## ஜனாதிபதிக்குக் கடிதம்

வடமராட்சி, டிசெ. 15

அரசாங்கமும் எதிர்க்கட்சியும் ஏனைய சகல அமைப்புக்களும் ஒருமனதாக மூன்றாந் தரப்பு மத்தியஸ்தத்துடனும் திறந்த மனத்துடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு இனப்பிரச்சினைத் தீர்வுக்கான வெற்றியைக்காண வேண்டும்.

இவ்வாறு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தா ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மூன்றாந் தரப்பு மத்தியஸ்தத்துடன் முன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதாக வெளிவந்த செய்தியைக் கண்டு மகிழ்ச்சியடைகிறோம், தமிழ் மக்கள் படும் துன்பங்களை நாம் எளிதில் மறந்துவிட முடியாது. தமிழ் மக்களும் வாழ்க்கையில் முன்னேற வேண்டும். இந்த நாட்டுக்கு நல்ல எதிர்காலம் வர வாய்ப்புண்டு.

எவர் மீதும் சந்தேகம் கொள்வதோ அல்லது திரும்பத் திரும்ப எதிர்மறையான கருத்துக்களைத் தெரிவிப்பதாலோ ஒன்றும் ஆகப்போவதில்லை.

உலகம் போற்றும் சுவாமி விவேகானந்தர் எதிர்மறைக் கருத்துக்கள் செயற்பாடுகள் பிரயோசனமற்றவை என்றும் உடன்பாடு காணுவதே வாழ்வின் சிறப்பு என்றும் கூறுகிறார்.

தமிழ் மக்கள் 28 வருடங்களாகத் துன்பத்தையே அனுபவித்து வருகின்றனர்.

1983 ஆம் ஆண்டிலிருந்து அதிகார துஷ்பிரயோகம் மனித நேயப்பாடு இல்லாத ஒரு நிலை இந்நாட்டில் இருந்து வருகிறது. தமிழ் மக்கள் மட்டுமல்ல இந்நாட்டு மக்கள் யாவரும் மன அமைதியுடனும் சந்தோஷமாகவும் வாழ இன்னும் ஒரு சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.

தற்போது அரசாங்கத்துக்கு ஒரு பொறுப்பு உள்ளது. பெரும்பான்மை மக்களாகிய நீங்கள் அதிகார துஷ்பிரயோகத்தால்— அடக்கு முறையால் — ஓர் இனத்தின் எதிர்கால வளர்ச்சி, வாழ்வு போன்றவற்றை நிர்மூலமாக்க இறைவன் தானும் உடன்படார். மாறி மாறி ஒவ்வோர் அரசாங்கமும் தமிழ் இனத்தை பகடைக்காய்களாகநகர்த்திய காலத்திற்கு முடிவு வந்துவிட்டது. இப்போது உலகெங்கும் பல இடங்களில் தீர்க்க முடியாத அரசியல் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருவதை நாம் நன்கு அறிவோம்.

ஏனவே காலந் தாழ்த்தாது திறந்த மனத்துடன், மூன்றாந் தர மத்தியஸ்தத்துடன் பேச்சுகளை நடத்துவதனால் இந்நாட்டிற்கும் சகல இன மக்களுக்கும் நல்லதோர் எதிர்காலம் கிட்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-173)

# மரங்கள் நடுவதற்கு நடவடிக்கை

நெடுந்தீவு, டிசெ. 15

நெடுந்தீவின் பிரதான வீதி ஓரங்களிலும், ஏனைய பகுதிகளிலும் நிழல் மரங்களை நடுவதற்கு நெடுந்தீவு மர நடுகை இயக்கத் தலைவர் இரா. தர்மலிங்கம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

தற்போது பனம் விதைகள் நடும் பணியில் மர நடுகை இயக்கம் ஈடுபட்டுள்ளது.

(ஐ-111)

# வெற்றிலைத் திருட்டு அதிகரிப்பு

சுன்னாகம் தெற்குப் பகுதியில் வீட்டோடு சேர்ந்த வெற்றிலைத் தோட்டம் ஒன்றில் இரண்டாவது தடவையும் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

ஒரு வார இடைவெளியில் நடத்தப்பட்ட திருட்டின் போது வெற்றிலை மரங்கள் முழுமையாக அறுக்கப்பட்டு வெற்றிலை திருடப்பட்டுள்ளது.

இதேவேளை— இன்னொரு வீட்டில் உள்ள வெற்றிலைத் தோட்டத்திலும் தொடர்ச்சியாக நான்கு தினங்கள் வெற்றிலை திருடப்பட்டுள்ளது. அதிகாலை வேளையிலே இத்திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-27)

# உண்மை நிலைமையை கண்டறிவதே எமது இலங்கை விஜயத்தின் நோக்கம்

## தென் ஆபிரிக்க பிரதிநிதிகள் குழு தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 15

இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்படுவதாகக் கூறப்படும் அநீதிகள் மற்றும் இனப் படுகொலைகள் தொடர்பான உண்மை நிலைமையைக்கண்டறிந்து தென் ஆபிரிக்காவில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழர்கள், இந்திய வம்சாவளிக் குடிகள், தென் ஆபிரிக்கச் சமூகம் ஆகியவற்றுக்குத் தெளிவு படுத்துவதே எமது இலங்கை விஜயத்தின் நோக்கம் ஆகும்.

இப்படி இலங்கைக்கு வந்துள்ள தென் ஆபிரிக்காவின் இன்காத்தா விடுதலைக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கே. ராஜு தெரிவித்தார்.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக அநீதி இழைக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. அது மட்டுமன்றி இலங்கையில் இனப்படுகொலைகள் இடம்பெறுவதாகவும் கூறப்பட்டு வருகின்றது. ஆனால் அவைதொடர்பான உண்மை நிலைமை வெளியில் தெரிவதில்லை.

எனவே உண்மை நிலைமையைக் கண்டறிந்து தென் ஆபிரிக்காவில் வாழ்கின்ற சுமார் ஆறு லட்சம் இந்திய வம்சாவளித் தமிழர்கள், இந்திய வம்சாவளிக் குடிகள் மற்றும் தென் ஆபிரிக்கச் சமூகம் ஆகியவற்றுக்குத் தெளிவுபடுத்தும் நோக்கிலேயே நாம்இங்கு வந்துள்ளோம்.

கொழும்பிலுள்ள அரசியல்வாதிகளையும், அரசாங்க உயர்மட்டத்தினரையும் சந்திப்பது மட்டும் எமது நோக்கம் அல்ல. பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து நிலைமையைக் கண்டறிவதே எமது விருப்பமாகும்-என்றார்

அதே வேளை தூதுக்குழுவில் அங்கம் வகித்த ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் —

ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் விடுதலைப் போராட்டத்தை நடத்தி வந்தது. எனினும் சமாதானத்துக்கான சூழ்நிலை உருவாகிய போது பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டுப் பேச வருமாறு [illegible] கிரஸை எவரும் [illegible] வில்லை.

அப்படிக் கேட்கப்பட்டிருந்தால் சில சமயங்களில் பேச்சுவார்த்தையே நடைபெறாமல் போயிருக்கும். எனவே பேச்சுவார்த்தையின் போது முன் நிபந்தனை ஏன்பது அவசியமற்ற ஒன்றாகும்,

அது மட்டுமன்றி எமது பேச்சுவார்த்தைநடைபெற்ற போது பங்குபற்றிய 26 குழுக்களும் ஒரே அந்தஸ்து உடையன என்றே கருதப்பட்டன.

இலங்கையைப் பொறுத்தவரையில் பேச்சுவார்த்தை என்பது மிகவும் அவசியமான ஒன்று. அது மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் அல்லது ஏற்பாட்டாளர்கள் மூலமாக நடைபெறலாம் என்று தெரிவித்தார்.

இனப்பிரச்சினை இங்கு மோசமான நிலையிலுள்ளது. இதனால் ஏற்படும் அழிவுகளையும், இழப்புக்களையும் தடுக்கும் வகையில் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும். இது ஓர் இறுதிச் சந்தர்ப்பம். இதனைப் பயன்படுத்தி இரு தரப்பினரும் பேச்சுவார்த்தை மேசைக்கு வர வேண்டும் — என்றும் [illegible] தென் ஆபிரிக்க நாடாளுமன்றக் குழு தெரிவித்துள்ளது. (இ 9-10)

# வாசகர் திருமுகம்

## தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் எப்போது?

தீவுப்பகுதியைச் சேர்ந்த 57 தொண்டர் ஆசிரியர்களுக்கு வலயம் ஒன்றின் கல்விப்பணிப்பாளர் நேரில் சென்று நிரந்தர நியமனம் வழங்கி 3 மாதங்கள் முடிந்து விட்டன. அவர்களின் நியமனத்துக்கு ஒரு தனித்துவமான இடமுண்டு என்ற காரணத்தினாலேயே ஈ. பி. டி. பி அமைப்பு அவர்களுக்கு அமைச்சரவையின் விசேட அங்கீகாரத்தைப்பெற்று நிரந்தர நியமனத்தை பெற்றுக் கொடுத்திருக்கின்றது.

ஆனால் யாழ். குடாநாட்டில் 10 ஆண்டுகளுக்கு மேலாக எதுவித ஊதியமும் இன்றித் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றிய அறுநூறு தொண்டர் ஆசிரியர்களுக்கு இன்னமும் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. 1996 ஆம் ஆண்டுக்கு முன் போர்க் கொடுமைகள் மலிந்து அரச நியமனங்களுக்கு புறக்கணிக்கப்பட்ட இடமாக இருந்த யாழ். குடாநாட்டில் உள்ள மாணவச் செல்வங்களின் கல்வியை அழிந்து விடாது பாதுகாக்கும் தூண்களாக விளங்கியவர்கள் தொண்டர் ஆசிரியர்களே ஆவர்.

தீவுப்பகுதி தொண்டராசிரியர்களின் நியமனத்தின் பின் தமக்கு நிரந்தர நியமனம் கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் காத்திருந்த தொண்டராசிரியர்களுக்கு சம்பந்தப்பட்டவர்களிடம் எதற்கும் பொறுமையாக இருங்கள் என்று தான் பதில் கிடைக்கிறது. தொண்டராசிரியர் சங்கம்காலத்துக்குகாலம் புதியபதிவுகளைமேற்கொண்டு வருகிறது. அவர்களின் தொகையும் பெருகி வருகின்றது.

காலந் தாழ்த்தப்பட்ட போதிலும் தொண்டராசிரியர்களின் சேவை கருதி அவர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம் வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

**நா. இந்திரன்**
(புறந்தள்ளப்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் சார்பாக)
யாழ்ப்பாணம்.

## வட்டுக்கோட்டையும் மின்விநியோகமும்

வட்டுக்கோட்டைப் பகுதியில் சங்கரத்தைச் சந்தி வரை மின் விநியோக விஸ்தரிப்பு வேலைகள் முடிவடைந்து பல மாதங்களாகின்றன. அதேவேளை வட்டுக்கோட்டைச் சந்திவரை மின் கம்பிகள் இணைக்கப்பட்டிருந்தும் வீதிகளுக்கோ, வீடுகளுக்கோ மின்சாரம் வழங்கப்படவில்லை.

வட்டுக்கோட்டையைப் பொறுத்தவரை யாழ்ப்பாணக் கல்லூரிச் சுற்றாடல் அதிக குடியிருப்பாளர்களைக் கொண்டதாகும். இப்பகுதிக்கு இன்னமும் மின் விநியோகம் நடைபெறாத போதும் நம்பிக்கையின் அடிப்படையில் இப்பகுதி மக்கள் பணத்தைச் செலுத்தியுள்ளனர். அதேகால வேளையில் பணம் செலுத்திய ஏனைய சிலருக்கு மின் விநியோக விஸ்தரிப்பு வேலைகள் முடிவடைந்துள்ளன.

வட்டுக்கோட்டைப் பிரதேசத்தில் ஒரே பகுதியிலுள்ள இடங்களில் கூட இத்தகைய பாரபட்சம் காட்டப்படுவது ஏன்? சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தைத் தெளிவுபடுத்துவதுடன் உரிய நடவடிக்கையை விரைவில் மேற்கொள்ள வேண்டும்.

**தே. சா. தயாளினி.**
(பாதிக்கப்பட்டோர் சார்பாக)
வட்டுக்கோட்டை.

## தே. அ. அட்டை தொடர்பாக மாற்றுவழி மிக அவசியம்

நவம்பர் 22 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் யாழ் இராணுவத் தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் அன்றைய தினத்திலிருந்து யாழ். குடாநாட்டின் எந்தக் காவலரணினூடாகவும் பயணம் செய்யும் பொதுமக்கள் அனைவரும் தமது இராணுவ (விசேட) அடையாள அட்டையுடன், தேசிய அடையாள அட்டையினையும் கொண்டு செல்லவேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக எனது பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் கருத்தினை அறியத்தருகின்றேன்.

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் போது 16 வயதிற்கு மேற்பட்டவர்கள் அனைவரும் விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் சிலர் உரியவயதைஅடைந்தும்கூட தேசியஅட்டையாள அட்டைக்கு விண்ணப்பிக்காது உள்ளனர். ஆனால் இராணுவத்தலைமையகம் திடீரென இவ் அறிவித்தலை விடுத்துள்ளமையால் தேசிய அடையாள அட்டை பெறாதவர்கள் பலர் தமது அன்றாடத் தொழிலுக்கு வேறு பிரதேசங்களுக்குப் போகமுடியாது உள்ளார்கள். இதனால் இவர்களுடைய அன்றாட உழைப்பு இல்லாது பாதிப்படைந்து மிகவும் சிரமப்படுகிறார்கள்.

தேசிய அடையாள அட்டை மிகவும் இலகுவில் விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளக்கூடியதல்ல. விண்ணப்பிக்கும் போது உரியவர்களது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் போன்ற ஆவணங்களைச் சமர்ப்பித்தே விண்ணப்பிக்க முடியும். ஆனால் எமது பிரதேசத்தில் பலரிடம் தமது பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் இல்லாமையினால் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க முடியாது அலைந்து திரிகின்றார்கள்.

இத்தகைய விடயங்களைக் கருத்திற்கொண்டு இவ்விடயத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் தேசிய அடையாள அட்டையினை இது வரைக்கும் பெறாதவர்களுக்கு தங்களால் இயன்ற மாற்றுவழிகளினை ஏற்படுத்தி உதவுவார்களா?

**தி. விமலன்**
சிவன் வீதி,
புத்தூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் வைத்திய கலாநிதி

**ஆறுமுகம் சசிகாந்தன்**

(யாழ். போதனா வைத்தியசாலை)

மலர்வு **17 — 02 — 1966**

உதிர்வு **15 — 12 — 1995**

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் தங்கள் பிரிவால் வாடும்
**குடும்பத்தினர், உறவினர்கள்.**

187/7 (12) கின்னர் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(61297)

# சர்வதேச மருத்துவக்கல்லூரி; கொழும்பில் நிறுவத் திட்டம்

## 30 கோடி ரூபா செலவில்

கொழும்பு, டிசெ. 15

சர்வதேச மருத்துவக் கல்லூரி ஒன்று வெளிநாட்டு உதவியுடன் நரஹேன்பிட்டியில் 30 கோடி ரூபா செலவில் அமைக்கப்படவிருக்கின்றது.

பிரிட்டனில் உள்ள அபர்டீன் பல்கலைக்கழகத்துடன் இணைந்து அமையவிருக்கும் இந்த மருத்துவக் கல்லூரி நாட்டில் உள்ள போதனா வைத்தியசாலைகளுடன் இணைந்ததாக நரஹேன்பிட்டியில் இரண்டரை ஏக்கர் நிலத்தில் அமையவிருக்கிறது என்று அந்த வைத்தியக்கல்லூரிமுகாமைத்துவப் பணிப்பாளர் அசோகா ஜெயசேனா தெரிவித்தார்.

அடுத்த வருடம் ஒக்ரோபர் மாதம் இந்த மருத்துவக் கல்லூரியில் மாணவர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

இந்த மருத்துவக் கல்லூரியைஅமைப்பதற்கான சட்ட அனுமதிகள் சட்ட மா அதிபர் திணைக்களத்தால் வழங்கப்பட்டது.

இந்த மருத்துவக் கல்லூரியில் சித்தியடையும் மாணவர்களுக்கு பிரிட்டிஷ் அபர்டீன் பல்கலைக்கழகம் வழங்கும் சர்வதேச பட்டம் வழங்கப்படும்,

இந்த மருத்துவக் கல்லூரியின் முகாமைத்துவ பணியையும், விரிவுரைப்பணிகளையும் பிரபல வைத்திய நிபுணர்களான பி. ஆர். அன்ரனீஸ், பேராசிரியர் ரிஸ்விஷிரப், சி. ஜி. உயங்கொட, பிரிட்டிஷ் அபர்டீன் பல்கலைக்கழக விரிவுரையாளர் கீநாஞ்சனா மெண்டிஸ் ஆகியோர் மேற்கொள்வர்.

இலங்கையைச் சேர்ந்த சிறந்த வைத்தியக்குழு இந்த மருத்துவக் கல்லூரியில் பணியாற்றும்.

இலங்கையில் உள்ள மருத்துவக் கல்லூரிக்கு அனுமதிக்கப்படும் தகுதியுடன் மாணவர்கள் இந்த மருத்துவக் கல்லூரிக்கும் அனுமதிக்கப்படவிருப்பதால், வைத்திய அதிகாரிகள் சங்கம் எமக்கு ஒத்துழைப்புத்தர இணங்கியுள்ளது என்று முகாமைத்துவ பணிப்பாளர் ஜெயசேன தெரிவித்தார்.

வட இலங்கை மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டபோது அந்தக் கல்லூரி எதிர்நோக்கிய பிரச்சினைகள் எமது கல்லூரிக்கு வரமாட்டாது என்றும் அவர் கூறினார்.

வட இலங்கை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தமது பயிற்சிகளைத் தற்போது இயங்கும் போதனா வைத்தியசாலைகளிலேயே பெற வேண்டிய நிலை இருந்தது. எமது கல்லூரியுடன் நாம் போதனா வைத்தியசாலை ஒன்றையும் அமைப்பதால் மாணவர்களுக்குப் பயிற்சி பெறும் பிரச்சினை இல்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

வெளிநாட்டு, உள்நாட்டு மாணவர்கள் இந்தக் கல்லூரியில் சேர்க்கப்படுவதால் வெளிநாட்டுப் பட்டம் வழங்கப்படும். இலங்கை மாணவர்கள் இந்தப் பட்டத்தைப் பெற்ற பின்னர் 16 ஆவது பிரிவின் கீழ் ஒரு பரீட்சைக்கு தோற்றினால்; இலங்கையில் பணிபுரியும் தகுதிகளைப் பெறுவர் என்றும் கூறினார்.

வெளிநாட்டுக்கு இலங்கை மாணவர்கள் மருத்துவப் பட்டம் பெறச்சென்று தேவையற்ற வகையில் பணம் செலவிடுவதைத் தவிர்க்கும் வகையில் இந்தக் கல்லூரி அமைக்கப்படுகிறது.

வருடாந்தம் 300 மாணவர்கள் வெளிநாடு செல்கிறார்கள். 40 லட்சம் ரூபா செலவுடன் ஐந்து வருடத்தில் வைத்தியப்பட்டம் பெறஇந்த மருத்துவக் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெளிநாடு செல்லும் ஒரு மாணவன் லண்டனில் படித்தால் 80 லட்சம் ரூபாவையும், இந்தியாவில் படித்தால் 45 லட்சம் ருபாவையும் செலவிட வேண்டியுள்ளது.

இலங்கையில் பட்டம் பெற்ற மாணவர்கள் பலர் வெளிநாட்டு வைத்தியப் பட்டம் பெறச்செல்கிறார்கள். இனிமேல் இந்தக் கல்லூரியில் சேர்ந்து அவர்கள் வெளிநாட்டுப் பட்டத்தையும் பெறலாம்.

இந்தக் கல்லூரிக்கான மாணவர்களைப் பிரிட்டிஷ் அபர்டீன் பல்கலைக்கழகம் தெரிவு செய்யும். லண்டன் உயர்தரப்பரீட்சையில் 'ஏ2பி' சித்தியுடன் அனுமதி பெற முடியும். இலங்கையில் பல்கலைக்கழக வெட்டுப்புள்ளி அடிப்படையில் அனுமதி பெறமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3-10)


## O/L Dec. 1999
### புதிய வகுப்புகள்

★ யாழ் நகரின் அனுபவமிக்க முன்னணி ஆசிரியர் குழுவினரின் விரிவுரைகள்.

★ மாதாந்த பரீட்சைகள் மூலம் மீட்டல்.

★ விசேட கணித / விஞ்ஞான மீட்டல் வகுப்புகள்.

★ கணித / விஞ்ஞான பாடங்களில் செயல் மூலம் கற்கும் வசதிகள்.

★ கணனித்துறையில் அடிப்படை அறிவைப் பெறும் வசதிகள்.

அனைத்தும் கணித ஆசான் வரதன் ஆசிரியரின் நேரடி மேற்பார்வையில்.

★ புதிய அனுமதிகள் இன்றிலிருந்து இரு வாரங்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

★ டிசெம்பர் மாதத்தில் எதிர்வரும் சில நாள்களுக்கான கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

**The Express Institute**
IRUPALAI KOPAY

- அதிபர்

(61320)


## மூன்றாம் ஆண்டு நினைவுப் பாமாலையில்

எங்கள் தலைவா! அப்பா!



அமரர்

**இளையதம்பி கனகசபாபதி**

(மலாயன் பென்சனியர்)

மலர்வு **25—12—1900**

உதிர்வு **19—11—1995**

திதி: 15 - 12 - 1998 செவ்வாய்க்கிழமை

ஆண்டு மூன்று ஆனதப்பா ஆனாலும்
ஆறுதல் சொல்ல யாரிருந்தென்ன? தங்கள்
ஆருயிர் அன்புக்கு ஈடாகுமா? — அப்பா
ஆதரிக்க ஆயிரம் உறவிருந்தென்ன?
அரவணைக்க ஆயிரம் உள்ளமிருந்தென்ன?
அப்பா என்றழைக்கத் தாங்களில்லையே!
என் செய்வோம்.

தங்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இரு கரங்கூப்பி இறைஞ்சி நிற்கின்றோம்.

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(61274)

## ஐந்தாம் ஆண்டு நினைவுகள்



திருமதி

**கணேசநாதன் அதிசயரத்தினம்**

மலர்வு: **04—11—1943**

உதிர்வு: **10—12—1993**

திதி: 15 — 12 — 1998

என்றென்றும் எம் நெஞ்சை விட்டகலா
உங்கள் நினைவலைகள் அம்மா!

கணவர்: **க. கணேசநாதன்**

மானிப்பாய் வீதி,
உடுவில்.

(61106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## புதுவழி செல்வாரா?

இலங்கையின் இன விவகாரம், போர், தமிழர்களின் கஷ்டநிலை, கருத்து நிலை என்பனவற்றை நேரில் அறிந்து செல்வதற்காகவே தென்னாபிரிக்காவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தூதுக்குழு இலங்கைக்கு வந்தது.

அந்தத் தூதுக்குழுவில் அங்கம் வகித்த தமிழரான ராஜூ தெரிவித்துள்ள கருத்து எல்லோரது கவனத்தையும் ஈர்ப்பதாகும். அவர் இங்கு வந்த இரண்டொரு நாள்களிலேயே தமிழ்க் கட்சிகளின் போக்கை வெகு இலகுவாகக் கண்டு பிடித்து விட்டார்!

நாடாளுமன்ற அரசியல் மூலம் தமிழர்களின் உரிமைகளைப் பெறுவதற்கென்று இயங்கும் தமிழ்க் கட்சிகளிடையே ஒரு சதத்துக்கேனும் ஒற்றுமை இல்லை. அவை தமிழ் மக்களின் பிரச்சினை குறித்து ஒன்றுசேர்ந்துகுரல்கொடுப்பதில்லை. தனித்தனியே தமது சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு இசைவாகவே தமிழ் மக்களின் விவகாரத்தைக் கையாள்கின்றன. மக்களின் மனநிலை கருத்து நிலை என்பனவற்றை முன் வைத்துச் செயற்படுவதில்லை என்ற உண்மைகளை அவர் மிகச் சுலபமாகக் கண்டு பிடித்து விட்டார்.

ஒட்டு மொத்தத்தில். தமிழ்க் கட்சிகள் சூடு சொரணை இன்றித் தமது போக்கிலேயே செல்கின்றன. தாம் பிளவுபட்டு நிற்பதால், பிரிந்து நின்று செயற்படுவதால், தமிழ் மக்களின் பக்கம் பலவீனமடைகிறது என்பதனைத் தானும் சிந்தித்தேனும் உணர்வதாக இல்லை.

அதுவும், பதவியில் உள்ள அரசாங்கத்துக்கு நெருக்குதல் கொடுக்கக் கூடியதான நாடாளுமன்ற வாக்குப்பலம் தமிழ்க் கட்சிகளிடம் இருந்தபோதும் —

ஒவ்வொன்றும் தம்வழி — தனித்தனி வழி — செல்வதால், அரசியல் சுயநலத்தைத் துறக்க விரும்பாததால் அரசுக்குப்பின்னால், சந்திரிகாவின் சேலைத் தலைப்பைப் பிடித்துக் கொண்டு தொங்க வேண்டியதாயிற்று.

தென்னாபிரிக்காவில் இருந்து வந்த தமிழ் எம்.பி. ஒருவர் இது விடயத்தைப் புட்டுக்காட்டியதால் தமது போக்கை மாற்றுவார்கள் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

எனினும் —

இலங்கையின் தமிழ்க் கட்சிகள் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு, அனைத்தும் ஒன்றுபட்டு, மக்களுடன் இணைந்து ஒரே குரலில், இனப்பிரச்சினை விவகாரத்துக்குக் குரல் கொடுக்க வேண்டும் — என்ற அவரது புத்திமதியை ஏற்றுக்கொள்ள வேண்டும் என மக்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறோம்.

வெளிநாட்டுத் தமிழ் அரசியல் தலைவர் ஒருவர் இங்குள்ள தமிழ்க் கட்சிகள் குறித்து வெளியிட்டகருத்து இவர்களைத் தலைகுனியச் செய்யவேண்டும்.

வெட்கம்! வெட்கம்!

அவர் உண்மையையே சொன்னார் என்பதால் அந்தத் தலைகுனிவை நீக்குவதற்காகவேனும் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் புதிய வழியில் சிந்தித்துச் செயற்படுவார்களா?

# மூளைசாலிகள் வெளியேறுவதற்கு சமூக மனோபாவமும் தூண்டு விசை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறையினரின் வெளியீடான "காலசுரபி" சஞ்சிகையின் முதலாவது இதழில் வெளியான "தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து மூளைசாலிகள் வெளியேற்றமும் சமூக, பொருளாதாரத் தாக்கமும்" என்ற கட்டுரை சமகாலப் பிரச்சினையைத் தெளிவாகவிளக்குகிறது.

வாசகர்களைச் சிந்திக்கத் தூண்டும் வண்ணம் பிரசுரமாகும் இக் கட்டுரையை, யாழ் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல், சமூகவியல்துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் ஜி. எம். செபஸ்ரியாம்பிள்ளை எழுதியுள்ளார்.

இக்கட்டுரை இரண்டு பகுதிகளாக உதயனில் வெளிவருகிறது.

(நேற்றைய தொடர்ச்சி)

அறிவின் பெரும் பங்கு மேற்கு நாடுகளில்தான் பெருமளவு வளர்ச்சி பெற்று வருகின்றது. விஞ்ஞான ஆய்வுகளின் 98 சதவீமான பங்கு மேற்கு நாடுகளில் நடைபெறுகின்றதென்றும் 2 சதவீதமான பங்கே மூன்றாம் உலக நாடுகளில் நடைபெறுகின்றதென்றும், அதிலும்1சதவீதமானவையேமூன்றாம் உலக நாடுகளின் பிரச்சினை குறித்து நடைபெறுகின்றது என்பது ஐ.நா.வின் மதிப்பீடு. (ஆதாரம்: பொருளியல் நோக்கு, யூன், 1976) விஞ்ஞானம் தொடர்பான அறிவின் பெரும்பகுதி மேற்கிலிருந்தே எமது நாடுகளுக்குப் பரிமாற்றம் செய்யப்படுகின்றது. இங்கிருந்து வெளியேறிச் செல்கின்ற மூளைசாலிகள் மேற்கு நாடுகளில்

### பகுதி - 2

தொழில் புரிந்து விட்டு இங்கு மீண்டும் வரும்போது அல்லது அங்கிருந்தவாறே எமது பிரதேசங்களின் அபிவிருத்திக்கு ஆலோசனை வழங்கும் பொழுதோ, எமது சூழலினுடைய யதார்த்தங்களை அறிந்து கொள்ளாது, மேற்கு நாடுகளின் தொழில்நுட்பவியலை எதுவித மாற்றமுமின்றி இங்கு பிரயோகிக்க முற்படுகின்றனர்

இதன் காரணமாகப் பொருத்தமான தொழில்நுட்பவியலை ஏற்படுத்துவதில் பின்னடைவு காணப்படுகின்றது. எமது விவசாயிகள் தேவைக்கு அதிகமான விவசாய இரசாயனப் பொருள்களைப் பயன்படுத்துவதற்கு மேற்கு நாடுகளினுடைய தொழில்நுட்பவியலை எதுவித விமர்சனங்களுமின்றி கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதே காரணம் என்று சொல்லப்படுகின்றது. இவற்றின் காரணமாக எமது மண்ணிலே இயற்கையாகப் பயன்படுத்தக் கூடிய வளமாக்கிகளையும், கிருமிநாசினிகளையும் உபயோகிக்காது விடுகின்றனர். இந்நிலையில் பார்க்கும்போது வெளியேறிய மூளைசாலிகள், எமது மண்ணுக்குப்பொருத்தமான விஞ்ஞான தொழில்நுட்ப அறிவுகளைத் தருவதற்காவது உதவுகின்றார்கள் என்றும் கூறமுடியாது.

கடந்த இரண்டு தசாப்தங்களாக எமது பொருளாதார வளர்ச்சி வீதம் உயர்ந்து வந்துள்ளது என்று (Dr M A. - Humnin Malik) குறிப்பிட்டுள்ளார். ஆனால் போதிய கைத்தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தத் தவறிய தன் காரணமாக வேலையின்மை அதிகரித்து வந்துள்ளது. இந்நிலையில் வருமான இடைவெளியும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. அதாவது தாழ்ந்த வருமானம் உள்ளோர் மத்தியில்தான் வேலையின்மையும், எழுத்தறிவின்மையும் அதிக அளவிலே காணப்படுகின்றன.

இந்த நாட்டுக்கு உகந்ததாக உருவாக்கப் படவில்லை. சுதந்திரத்திற்கு முற்பட்ட மனோபாவங்களும், விழுமியங்களும் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட கல்வி முறையின் ஊடாகப் பின்பற்றப் படுகிறது. இதன் காரணமாக இந்தக் கல்வி முறை உற்பத்தி செய்யும் மூளைசாலிகள் இந்த மண்ணோடும் மக்களோடும் ஒட்டி வாழ முடியாதவர்களாகக் காணப் படுகின்றார்கள்.

கடந்த இரு தசாப்தங்களில் மட்டும் பருமட்டாக 3,000 பேர் வரையிலான பொறியியலாளர்களும், வைத்தியர்களும் எமது நாட்டை விட்டு வெளியேறியிருக்கிறார்கள். இந்த மண்ணோடு ஒட்டி உறவாடி மக்களோடு பழகி அவர்களின் இன்ப துன்பங்களைப் புரிந்து மக்களுக்குச் சேவை செய்யும் மனோபாவத்தை இன்னமும் இக்கல்வி முறை வளர்த்தெடுக்கவில்லை. எப்போது வெளிநாடு செல்வது என்ற பேச்சும், எதிர்பார்ப்புக்களும் தான் இன்றைய

யேற்றம் மேற்கு நாடுகளைப் பொறுத்த வரையில் சமூக பொருளாதார அடிப்படையில் ஓர் இலாபகரமான செயல் என்றே குறிப்பிட வேண்டி உள்ளது. வளர்ச்சியடைந்த நாடுகளில் கல்விச் செலவு அதிகரித்து வருகின்றது. உதாரணமாக ஐக்கிய அமெரிக்காவில் ஒரு வைத்தியரை உருவாக்குவதற்கு 21/2 லட்சம் டொலருக்கு மேல் செலவாகிறது. (ஆதாரம் Development and Co-operation No. 3 1989) இந்த நிலையில் எமது நாட்டிலிருந்து ஒரு வைத்தியரை அந்நாடு ஏற்கும் போது எதுவித கல்விச் செலவுமின்றி அவர்களது சேவைகளைப் பெறக்கூடியதாக இருக்கின்றது. இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியாவிற்கும், நியூசிலாந்துக்கும் புலம் பெயர்ந்த வைத்தியர்களின் எண்ணிக்கையை ஒப்பிடும்போது அந்நாடுகளிலிருந்து இலங்கைக்குக் கிடைக்கும் உதவிகள் குறைவாகவே காணப்படுகின்றன. இந்நிலையில் மூளைசாலிகள் வெளியேற்றம் வளர்ச்சி

## மண், மொழி மீதான பற்றுக்கள் வெளிநாடுசென்றவரிடம் துண்டிப்பு

சமூகத்தின் அடித்தளத்திலே வாழ்கின்ற மக்களிடத்தே வறுமை மிகவும் ஆழமாகப் பரவி உள்ளது. இவற்றின் பின்னணியிலே அபிவிருத்தி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வி கண்டிருக்கின்றன. வேலை வாய்ப்பு ஏற்படுத்துவதற்கும், தொழில்நுட்பவியல் முன்னேற்றங்களை ஏற்படுத்துவதற்கும் கல்வி மூலதனம் பரந்த அளவிலே பயன்படுத்தப்படவில்லை. கல்வி மூலதனம் என்ற இந்தக் காரணிகளும் மூளைசாலிகளின் வெளியேற்றம் என்பதுடன் தொடர்பு கொண்டிருப்பதைக் காணலாம்.

மூளைசாலிகள் சமூக அடுக்கமைப்பில் உயர்நிலையில்

உயர்தரப் பாடசாலை மாணவர்களின் சிறப்பான எண்ணமாக இருக்கிறது இன்றைய நிலையில் வெளிநாடு செல்வதற்குரிய வாய்ப்புக்கள் பல்வேறு மட்டங்களிலே விரிவடைந்து காணப்படுகின்றன.

மூளைசாலிகள் மட்டுமன்றி சராசரியான கல்வியறிவைப் பெற்றவர்களும் வெளிநாட்டு மோகத்தினாலே தூண்டப்படுகின்றார்கள். ஏற்கெனவே வெளிநாடுகளிலே தரித்திருப்போர் தமது உறவினர்களையும், நண்பர்களையும் தாம் வாழும் நாடுகளுக்கு அழைப்பதிலே பலவகையான ஒத்துழைப்புக்களை வழங்குகின்றார்கள். சிலர் இங்கிருந்து மக்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு முகவர்களா

ஜி. எம். செபஸ்ரியாம்பிள்ளை
யாழ். பல்கலைக்கழகம்

உள்ளவர்கள், இதன் காரணமாக மூலதனத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரமும் அவர்களிடமே காணப்படுகின்றது. இவர்கள் தாழ் நிலையில் உள்ளவர்களுடைய வருமானத்தைப் பெருக்குவதிலோ அவர்களுக்கு வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்துவதிலோ கவனம் செலுத்துவார்கள் என்று கூறமுடியாது.

### உகந்த கல்விமுறை இன்னும் இல்லை

மூளைசாலிகள் வெளியேற்றம் எமது கல்வி முறையோடு இணைந்த ஒரு தொழிற்பாடாக இருப்பதையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. சுதந்திரத்திற்குப் பின்னர் எமது கல்வி முறையிலே அவ்வப்போது சில மாற்றங்கள் செய்யப்பட்டாலும் இன்னமும் இக்கல்வி முறை

கவும் செயற்படுகின்றனர்.

மூளைசாலிகளும், சாதாரண கல்வியறிவுடையோரும் இந்நாட்டை விட்டு வெளியேறுவதற்கு சமூக மனோபாவங்களும் பிரதான தூண்டு விசைகளாக இருக்கின்றன. பிற நாடுகளின் பண்பாடும், பழக்க வழக்கங்களும் சிறந்தவை என்றும் எமது பண்பாடும் பழக்க வழக்கங்களும் அவற்றோடு ஒப்பிடும்போது பின்தங்கியவை என்றும் கருதப்படுகின்ற மனோபாவம் புலம் பெயர்ந்து செல்வோரிடம் காணப்படுகின்றது. இங்கிருப்பது போன்று வலிமையான சமூகக் கட்டுப்பாடுகள் வெளிநாடுகளில் இல்லையென்று கருதுகின்றனர். இங்கு ஒருவர் யாதாயினும் ஒரு தீய செயலில் ஈடுபடும்போது அவர் மாத்திரமல்ல அவரது குடும்பத்தினரும் அவச்சொல்லுக்கு ஆளாகின்றனர். ஆனால் வெளிநாடுகளில் எமது குடும்ப அமைப்பைப் போன்று விரிவுபடுத்தப்பட்ட கட்டுப்பாட்டுடன் அமைந்த குடும்ப அமைப்பு முறை இல்லாததினால் போதிய சுதந்திரம் தமக்குக் கிடைக்குமென எண்ணுகின்றனர்.

மூளைசாலிகளின் வெளி

யடைந்த நாடுகளுக்குச் சாதகமாகவே காணப்படுகின்றது

இலங்கையிலிருந்து வெளியேறிச் செல்கின்ற புத்தி ஜீவிகள் இரண்டு நாடுகளுக்குச் சொந்தமானவன் என்ற இருமைத் தன்மை சார்ந்த உணர்வுகளுடன் வாழ நேரிடுகிறது. வெளிப்படையாகப் பேசும்போது தனது சொந்த மண்ணை நேசிப்பவன் போன்றுகாட்டிக் கொண்டாலும் தனது அகவாழ்க்கையிலே தமது எஜமானர்களைப் போற்றி அவர்கள் வழியில் வாழ்ந்து தனக்கு உரிய சலுகைகளையும், அந்தஸ்துக்களையும் உத்தரவாதப்படுத்திக் கொள்கின்றனர். சுதந்திரமடைவதற்கு முன்னர் இந்நாட்டிலிருந்த அரசாங்க உத்தியோகத்தர்கள் எவ்விதமான காலனித்துவ அடிமை மனப்பான்மையுடன் செயற்பட்டனரோ அத்தகைய மனோபாவத்துடன் செயற்படுவதற்குரிய பக்குவத்தையும் இங்கு பெற்றுச்செல்கின்றனர்.

### தாயகமண் மீதான பற்று துண்டிப்பு

இங்கிருந்து புலம் பெயர்ந்து செல்வோரின் நிறம் அவர்களை அறியாமலேயே ஒருவித தாழ்வு மனப்பான்மையை அவர்களிடத்தில் ஏற்படுத்தி விடுகிறது. நிற அடிப்படையில் இவர்கள் பேதப்படுத்தப்பட்டு தாழ்வாக மதிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் கூட தமது நாட்டுக்குத் திரும்பி வந்து சேவை செய்ய வேண்டும் என்ற உணர்வு பொதுவாக ஏற்படுவதில்லை என்பதைக்குறிப்பிடவேண்டியுள்ளது. குடிபெயர்ந்து சென்றோர் பேசுகின்ற மொழியும், மொழி உச்சரிப்பும் அங்குள்ளோருடன் ஒப்பிடப்படும்போது நகைப்பிற்கு உள்ளாக்கப்படுகின்றது. இந்நிலையில் தமது பிள்ளைகள் தானும் அங்குள்ள மொழிகளைச் செவ்வனே பேச வேண்டும் என்பதற்காகத் தமிழ் மொழியை வீட்டுமொழியாகக் கையாளுவதற்கும் தயக்கம் காட்டுகின்றனர். இதனால் தாயக மண் மீதான தொடர்பும் மொழிப்பற்றும் மேலும் துண்டிக்கப்படுகின்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை

மார்கழி 01
புதன்கிழமை
திதி: திரயோதசி
பின் இரவு 1.32 வரை.
நட்சத்திரம்: விசாகம்
மாலை 6.58 வரை
பிரதோஷ விரதம்
சுபநேரம்: 4.52-6.22
ராகுகாலம்: 12.22-1.52
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

மனதிலே திருப்தி ஏற்பட்டிருந்தால் வாழ்வில் வறுமை வந்தாலும் அது வறுமையாகத் தெரியாது.

- ஷேக்ஸ்பியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன் சிமெந்து ஆலையை இயங்க வைக்குமாறு கோரிக்கை

கொழும்பு, டிசெ. 15

வடபகுதி மக்கள் தமது வீடுகளை, கடைகளை புனரமைப்பு செய்து கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். சிமெந்தின் விலை உயர்வே அதற்குக் காரணம். ஆகவே காங்கேசன் சிமெந்து ஆலையை இயங்க வைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

வடபகுதியில் குறிப்பாக யாழ்ப்பாணப் பகுதியில் சிமெந்து ஒரு பைக்கெட் 600 ரூபாவில் இருந்து 700 ரூபா வரை விற்பனையாகிறது. இதே சிமெந்து கொழும்பில் 325 ரூபாவுக்கு விற்பனையாகிறது. இந்த விலை அதிகரிப்பைத் தடுக்க வேண்டுமானால் உடனடியாக காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையை இயங்க வையுங்கள்.

— இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# ஐ. தே. கவின் பிரசாரம் கதிர்காமத்தில் ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 15

ஐ. தே. க தனது 44 ஆவது தேசிய மாநாட்டை அடுத்த வாரம் கதிர்காமத்தில் நடத்தி மாகாண சபைத் தேர்தல் பிரசாரத்தை அங்கிருந்து ஆரம்பிக்கவிருக்கின்றது.

சுதந்திரமான, நீதியான தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பது உட்பட பல முக்கிய தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட விருப்பதாக ஐ. தே. க. பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோறள தெரிவித்தார்.

(இ-3-10)

# ஆசிரியர்களுக்கு உள்ளக இடமாற்றம்

யாழ்ப்பாணம், டிசெ. 15

யாழ். மாவட்டத்தில் ஆசிரியர்களுக்கான உள்ளக இடமாற்றத்திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப்பட விருக்கிறது.

வலயத்துக்கு வலயமும் வலயத்துக்குள்ளும் இடமாற்றம் பெற விரும்பும் ஆசிரியர்களை உடன் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி இடமாற்றச்சபை கூடவிருக்கிறது என்றும்—

இந்த இடமாற்றச்சபையில் 5 வலயப் பணிப்பாளர்களும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் அங்கம் வகிப்பர் என்றும்—யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளர் கலாநிதி நா. தணிகாசலம்பிள்ளை தெரிவித்தார்.

ஜனவரி 31 ஆம் திகதிக்குப் பின்னர் எந்த இடமாற்றமும் செய்யக்கூடாது என்று கல்வி அமைச்சில் இருந்து உத்தரவு கிடைத்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

(இ-3)

# பிரதி அமைச்சர்கள் இருவர் பதவி ஏற்பர்

கொழும்பு, டிசெ. 15

புதிதாக இரு பிரதி அமைச்சர்கள் பதவியேற்கவிருக்கின்றனர்.

பிரதி அமைச்சர் நாவின்ன வடமேல் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதாலும் —

பிரதிஅமைச்சர் வை. பி. டி சில்வா மரணமானதாலும்— ஏற்பட்டுள்ள வெற்றிடங்களுக்கே புதியவர்கள் நியமிக்கப்படவிருக்கின்றனர்.

மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகபெரும, கொழும்புமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர ஆகியோரே புதிதாகப் பிரதி அமைச்சர்களாக நியமனம் பெற உள்ளனர். (இ-3-10)

# மீளக் குடியமர்வுக் கொடுப்பனவு

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் முதன்முறையாக தொளாயிரத்து 65 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வுக் கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாக மருதங்கேணி உதவிஅரசாங்க அதிபர் ப. வேலாயுதபிள்ளை தெரிவித்தார். (இ-36)

# முகாமைத்துவ டிப்ளோமா பதிவுச் சான்றிதழ்

வலி. தென்மேற்கு, டிசெ. 14

யாழ். திறந்த பல்கலைக் கழக டிப்ளோமா அனுமதித் தேர்வுப் பரீட்சையில் சித்தியடைந்த மேலும் ஒரு தொகுதியினருக்கு முகாமைத்துவ டிப்ளோமா பதிவுச்சான்றிதழ் அனுப்பப்பட்டுள்ளது.

பதிவுச் சான்றிதழ் கிடைக்கப்பெற்றவர்கள் அடுத்த மாதம் 13 ஆம் திகதிக்கு முன்னர் உரிய ஆவணங்களுடன் யாழ். திறந்த பல்கலைக்கழக பிராந்திய இயக்குநருடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

(இ-185)

# பிரிகேடியர்களாகப் பதவி உயர்வு

கொழும்பு, டிசெ. 15

ஸ்ரீலங்கா இராணுவத்தைச் சேர்ந்த ஆறு கேணல்கள் பிரிகேடியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

கேணல்களான கே. டி. ஏ. பெரேரா, எம் டி. ஆர். பீரிஸ், எம். ஆர். டபிள்யூ. டி. சொய்சா, எம். எல். ஜயரத்ன, டி. எச். எம். ஆர். தமிந்த, டபிள்யூ. பி. பீரிஸ் ஆகியோரே பிரிகேடியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (இ-3-16)

# எம் பிரதேச சபை அலுவலகத்தையே காணமுடியாத நிலையில் உள்ளோம்

## பிரதேச சபைத் தலைவர் விசனம்

சுன்னாகம், டிசெ. 15

வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் காரியாலயத்தை மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாம் பார்க்க முடியாமல் உள்ளோம். உண்மையிலேயே இது மிகவும் கவலைக்குரிய நிலையாகும்.

இவ்வாறு வலிகாமம் வடக்கு பிரதேச சபைத் தலைவர் சு. ஸ்ரீபாஸ்கரன் தெரிவித்தார்.

தமது வரவு செலவுத்திட்டச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தனது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

யாழ். மாவட்டத்திலே இராணுவ நடவடிக்கையால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதி என்று சொல்வதானால் அது வலிகாமம் வடக்குப் பிரதேசம் ஆகும். இதற்குக் காரணம் இராணுவத் தலைமையகம், விமானத்தளம், கடற்படைத்தளம் ஆகிய மூன்றும் இப் பிரதேசத்தில் உள்ளதே.

1983ஆம் ஆண்டில் புலம்பெயர்ந்த மக்கள் பலர்தமது வீடு வாசல்களைப் பார்க்க முடியாமல் உள்ளனர். எமது சபையின் காரியாலயத்தையே மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாம் பார்க்க முடியாமல் உள்ளோம்.

இப்பகுதிகளில் ஏற்பட்ட இழப்புகளுக்கு அரசாங்கம் ஈடு செய்யவில்லை. எத்தனையோ வீடுகள் புல்டோசரால் தரை மட்டமாக்கப்பட்டுள்ளன. மக்கள் சொத்துக்களை இழந்தது மாத்திரமன்றி வீடுகள் பலவும் பலத்த சேதமடைந்துள்ளன. இவற்றுக்கெல்லாம் அரசு பாராமுகமாயுள்ளது. இக்குடிமக்களின் கதியென்ன?

அவர்கள் எப்போது மனையமைத்து வாழ்வார்கள் என்ற சிந்தனைதான் எமக்கு உண்டு. அது மாத்திரமன்றிக் கால் நடைகளும் அழிந்தொழிந்து விட்டன. தோட்டங்கள், வயல்கள், துரவுகள் போன்றவற்றின் நிலையும் இது தான்.

மக்களின் வாழ்க்கைக்குரிய சுமுக நிலையைக் கொண்டு வருவதற்கு நிதி அவசியமும் அவசரமும் ஆகிறது. எமது பிரதேசத்தைப் பொறுத்தவரை சோலை வரி 20 ஆண்டுகளுக்கு மேலே கணிக்கப்பட்டது. அதனைக்கூட அறவிடமுடியாத நிலையில் இருக்கிறோம்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார். (இ-27)

# அம்பன் வைத்தியசாலை முழு நேரமும் இயங்குகிறது

செம்பியன்பற்று, டிசெ. 15

வடமராட்சி கிழக்கு அம்பன் மத்திய வைத்தியசாலை தற்போது முழுநேரமும் இயங்குகிறது.

இந்த வைத்தியசாலை மூன்று வருடங்களுக்கு முன் முழு நேரமும் இயங்கி வந்தது. பின்னர் சில மாதங்கள் செயலிழந்து இருந்தது.

இதன் பின்பு இந்த வைத்தியசாலை மதியம் 12 மணி வரையும் இயங்கியது. இதனால் பல நோயாளர்கள் வைத்தியசாலைக்கு வந்து சிகிச்சை பெற முடியாமல் திரும்பிச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது.

இதனை அடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நலன்விரும்பிகளும் பொது மக்களும் தொடர்பு கொண்டதன் பயனாக இந்த வைத்தியசாலை மாலை 4-00மணி வரை இயங்கி வந்தது.

தற்போது வைத்தியசாலை பொறுப்பதிகாரி எம். யோகேஸ்வரதேவன் மேற்கொண்ட முயற்சியின்பயனாக வைத்தியசாலை கடந்தவாரம் முதல் முழு நேரம் இயங்கத் தொடங்கி உள்ளது. (இ-136)

# மூளைசாலி...

(ஏழாம் பக்கத் தொடர்)

றது.

வெளியேறி அங்கு வாழும் தலைமுறையினர் தமிழ் மொழியையும், பண்பாட்டையும் அறியாதவர்களாகவும், இப் பண்பாட்டுடன் இணைந்து செல்ல முடியாதவர்களாகவும், இங்கு வந்து வாழ்வதிலே எதுவித உள்வியல் திருப்தியும் பெற முடியாதவர்களாகவும் மாறி வருகின்றனர். காலப்போக்கில் இவர்கள் தாம் வாழும் பண்பாடுகளுடன் இரண்டறக் கலந்துவிட அதிக வாய்ப்புக்கள் உண்டு.

இவ்வாறாக மூளைசாலிகளின் வெளியேற்றத்தைப் பொருளியல், அரசியல், சமூகவியல், கல்வியியல் கண்ணோட்டங்களிலே நோக்கலாம். வெளியேற வேண்டுமென்ற அவாவுடன் இங்கு செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற மூளைசாலிகளைத் தடுத்து நிறுத்தினாலும் நடைமுறையில் அவர்களின் பங்களிப்புக்கள் குறைவாகத்தான் இருக்கும். இந்நிலையில் வெளியேறாமல் இருப்பதற்குரிய உபாயம் அவர்களின் உள்ளுணர்வின் ஊடாக நாட்டுப்பற்றை ஏற்படுத்துவதே யாகும்.. எமது கல்விமுறை, பாடசாலைக் கல்வித்திட்டம் உயர்கல்வி அமைப்பு, கற்பிக்கும் முறைகள், கற்றவர்களுக்கு சமூகம் கொடுக்கின்ற முக்கியத்துவம் என்பவற்றினூடாக உள்ளுணர்வைக் கிளர்ந்து எழச்செய்தல் வேண்டும். கற்றவர்களுக்குச்சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பது முதுமொழி. இந்நிலையை உணர்ந்து கற்றவர்களுக்குரிய மாண்பு மதிக்கப்படத்தக்க வகையிலே எமது வாழ்க்கை முறையை அமைத்தல் வேண்டும்.

மேற்கூறிய அவதானிப்புக்களிலிருந்து மூளைசாலிகள் வெளியேற்றத்தை விளங்கிக் கொள்வதற்குரிய ''இன்மை நிலைக் கோட்பாட்டை'' அறியமுடியும். (Explaining B. D through the theory of deprivation)

தமது எதிர்பார்ப்புக்களுக்குரிய பொருளாதார, அரசியல், சமூக வளமின்மைகள் காரணமாக மூளைசாலிகள் வெளியேறுகின்றனர். இங்கு காணப்படும் ''இன்மை'' நிலை வெளியேற்றத்தைத் தூண்டுகிறது அதேபோல் தாம் சென்றுள்ள நாடுகளிலும் பொருளாதார, அரசியல், சமூக ''இன்மை'' நிலைகளை அனுபவிக்கின்றனர். ஆனால் அவர்கள் வாழுகின்ற நாடுகளிலே காணப்படுகின்ற 'இன்மை' நிலைகளோடு ஒப்பிடும்போது இங்குள்ள ''இன்மை'' நிலைகள் கூடுதலாகக் காணப்படுகின்றன. எந்த நாடுகளில் ''இன்மை'' நிலை கூடுதலாகக் காணப்படுகிறதோ, எந்த நாடுகளில் 'இன்மை'' நிலையின் அழுத்தங்கள் (Pressures) கூடுதலாகச் செயற்படுகின்றதோ அந் நாடுகளிலிருந்து மூளைசாலிகள் வெளியேறுவதற்குரிய வாய்ப்புக்கள்கூடுதலாகவிருக்கும்.

மேலும் '':இன்மை'' நிலையானது மூளைசாலிகள் வெளியேற்றத்தை மட்டும் உருவாக்கி விடமாட்டாது. சமூக பொருளாதார. அரசியல் மாற்றங்களுக்கான விசைகளையும் அதிகரிக்கச் செய்யும். ★

முற்றும்

# பன்முக ஆளுமை கொண்ட கவிஞரின் பன்முகத் தன்மைவாய்ந்த கவிதைகள்

## 'வடக்கிருத்தல்' நூல் வெளியீட்டில் உரை

சுன்னாகம், டிசெ. 15

கவிஞர் சோ. பத்மநாதன் பன்முக ஆளுமை கொண்டவர், ஆசிரியராக, நாடகக் கலைஞராக, சமூக சேவையாளராக, மொழி பெயர்ப்பாளராக, நிர்வாகியாக பன்முகப்பட்ட ஆளுமையுடைய அவரது கவிதைகளும் பன்முகத் தன்மை வாய்ந்தவையாகும்.

யாழ். பல்கலைக் கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று முன்தினம் காலை 9 30மணியளவில் பல்கலைக் கழககைலாசபதி கலையரங்கில்நடை பெற்ற கவிஞர்சோ. பத்மநாதனின் ''வடக்கிருத்தல்'' கவிதைத் தொகுதியின் வெளியீட்டு விழாவில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வுக்குத் தமிழ் மன்றத் தலைவர் எஸ். குணானந்தன் தலைமை வகித்தார். பேராசிரியர் சண்முகதாஸ் அங்கு உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:

'வடக்கிருத்தல்' என்பது பண்டைக் காலம் தொட்டு நமது மரபில் உள்ள ஒரு படிமம், அந்தப் படிமம் அர்த்தச் செறிவு கொண்டது. சமகால நிகழ்வுகளை மரபு வழிக் கவிதைகளாக அவர் படைத்தளித்துள்ளார், இங்குள்ள 64 கவிதைகளும் 64 வகையானவையாகும்— என்று தெரிவித்தார்.

ஆய்வுரைகளை விரிவுரையாளர் க. சொக்கலிங்கம், கவிஞர் முருகையன், காரை. சுந்தரம்பிள்ளை ஆகியோர் நிகழ்த்தினர். நூலின் முதற் பிரதியை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி நூலாசிரியரிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

காரை. சுந்தரம்பிள்ளை அங்கு உரையாற்றுகையில்—

சமூகத்துக்கு ஒரு செய்தியைக் கலைப்படைப்புச் சொல்ல வேண்டும். கவிஞரின் கவிதைகள் பல செய்திகளை மக்களுக்குச் சொல்கின்றன. இவைதான் இவரது கவித்துவமும் கலைத்துவமும் ஆகும் — என்று குறிப்பிட்டார்.

நூலாசிரியர்ஏற்புரையையும், கலாநிதி சி. சிவலிங்கராசா வரவேற்புரையையும் க. தணிகாசலம் நன்றியுரையையும் தெரிவித்தனர். (இ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடை விதித்த வலயங்களில் படையினர் நெல் விதைப்பு!

## மன்னார் அரச அதிபருக்கு முறையீடு

மன்னார், டிசெ. 15

மன்னார் உயிலங்குளம் பகுதியில் நெல் பயிரிட தடை விதிக்கப்பட்ட பகுதிகளில் படையினர் நெல் பயிரிட்டுள்ளனர் என்று அந்த வயல்களுக்கு உரித்தானவர்கள் மன்னார் அரச அதிபரிடம் முறையிட்டுள்ளனர்.

மன்னார் உயிலங்குளம் பகுதியில் உள்ள நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்தில் நெல் பயிரிடப் படையினர் தடை விதித்துள்ளனர்.

ஆனால் அந்தப் பகுதியில் உள்ள தமது நிலங்களில் படையினர் நெல் பயிரிட்டுள்ளனர் என்றும் —

இந்தச் செயலை நிறுத்தித் தமது நிலத்தைத் தம்மிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் — அந்த வயல் உரிமையாளர்கள் மன்னார் அரச அதிபரிடம் கேட்டுள்ளனர். (இ-3-21)

## இரவில் வயல்களில் வரம்பு வெட்டும் விஷமிகள்

வலி.தென்மேற்கு, டிசெ. 15

நவாலி ஈச்சம்தரவை நெற்காணி வரம்புகள் விஷமிகளால் இரவு வேளையில் வெட்டப்படுவதாக நவாலி விவசாயிகள் சம்மேளனத்திடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை நவாலி ஈச்சம் தரவைப் பகுதிகளில் நெற்செய்கை நல்ல விளைச்சலைக் கொண்டுள்ளது என்றும் —

வரம்பு வெட்டியதால் மழைநீர் முற்றாக ஓடும்நிலையில் உள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர். (இ-185)

## விளையாட்டுக் கழகங்களுக்கு உபகரணம்

செம்பியன்பற்று, டிசெ. 15

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு வழங்கப்படவென ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்கள் மருதங்கேணி பிரதேச செயலகத்துக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன.

மேலும் ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்கள் யாழ். செயலகத்தில் இருந்து மிக விரைவில் கிடைக்க உள்ளன என்றும்—

இரு தொகுதி விளையாட்டு உபகரணங்களும் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு வழங்கப்படவுள்ளன என்றும்—

இந்த உபகரணங்களை அம்பன் உதவி அரச அதிபர் பணிமனைக்கு எடுத்து வருவதற்கு அனுமதி தருமாறு வல்லிபுரம் சிவில் நிர்வாக அலுவலர் பணிமனையைக் கேட்டுள்ளோம் என்றும்—

அவர்களின் அனுமதி கிடைத்தவுடன் இந்த உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்படும் என்றும்—மருதங்கேணி உதவி அரச அதிபர் தெரிவித்தார். (இ-36)

## கிளாலி படுகொலைச்சம்பவம்

### படையினர் மூவரும் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், டிசெ. 15

கிளாலியில் கடந்த 7 ஆம் திகதி மூன்று மாதக் குழந்தை ஒன்றும் 15 வயதுச் சிறுவனும் சுட்டுக் கொல்லப்பட்டது தொடர்பாக பளைப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்ட மூன்று இராணுவத்தினரையும் இம்மாதம் 18 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் க. கேசவன் உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலீஸாரினால் கைது செய்யப்பட்ட பளை வி. ஐ. ஆர். இராணுவப் பிரிவில் கடமையாற்றும் வர்ணகுலசூரிய இனாசல் பிராங் பெர்னாண்டோ, குமாரகெதர மது இந்திக பிரசாத் ஞான சிறி, பாண்டி கமகே அஜித் பிரியந்தகுமாரா ஆகியமூன்று இராணுவத்தினருமே விளக்க மறியலில் வைக்கப்பட்டவர்களாவர், (ஐ-5)

## கருத்தரங்கு

நெல்லியடி, டிசெ. 15

'கெயர்' நிறுவனத்திடமிருந்து நீரிறைக்கும் இயந்திரங்களைப் பெற்ற பயனாளிகளுக்கான கருத்தரங்கு நாளை புதன்கிழமை காலை 9-30 மணிக்கு சாவகச்சேரி கமநல கேந்திர நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-109)

## வடமராட்சி கிழக்கில் தேடுதல்

செம்பியன்பற்று, டிசெ. 15

வடமராட்சி கிழக்கில் குடத்தனை, ராஜன் நகர், அம்பாள் ஆகிய பகுதிகள் நேற்று முன்தினம் காலை சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் இடம்பெற்றது.

இத்தேடுதல் காரணமாக அப்பகுதி ஊடான போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. (இ-3-36)

## தவறவிட்ட பயணப்பை

நேற்று முன் தினம் திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறைக்கு வந்து சேர்ந்த 'லங்காமுடித்த' கப்பலில் பயணம் செய்த பயணி ஒருவரால் தவறவிடப்பட்ட பயணப்பை ஒன்று கண்டெடுக்கப்பட்டு நேற்று ஈ.பி.டி.பி அமைப்பின் யாழ். அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டி அதனைப் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

# கிழக்கின் 2 பிரதேச சபைகள் நகரசபைகளாக தரம் உயர்வு

கொழும்பு, டிசெ. 15

கல்முனை, காத்தான்குடி பிரதேசசபைகள் நகரசபைகளாக தரமுயர்த்தப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி அமைச்சர் அலவி மௌலான இது சம்பந்தமான அறிவித்தலை விசேட வர்த்தமானியில் வெளியிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப் ஜனாதிபதிக்கு விடுத்த வேண்டுகோளுக்கு அமையவே கிழக்கிலுள்ள இந்த இரு பிரதேச சபைகளும் தரமுயர்த்தப்பட்டுள்ளன.

தரமுயர்த்தப்பட்ட கல்முனை, காத்தான்குடி நகரசபைகளின் உத்தியோகபூர்வ பதவிக்காலம் அடுத்த ஜூன் மாதம் 11 ஆம் திகதி ஆரம்பமாகும். (இ-9)

## சட்டமா அதிபரை நீக்க அரசாங்கம் முடிவு

பத்திரிகையாளர்களின் பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியிருக்கும் சட்டமா அதிபர் சரத் டி சில்வாவை அப்பதவியில் இருந்து நீக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

உயர் நீதிமன்ற நீதியரசரான பிரியந்த பெரேராவை அந்தப் பதவிக்கு நியமிக்கவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பாக ஆராய அமைக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவராகப் பிரியந்த பெரேரா பணியாற்றி வந்தது குறிப்பிடத்தக்கது. (இ-3-10)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயம்

வடமராட்சி, டிசெ. 15

வல்லை — அச்சுவேலிச் சந்திக்கு அருகில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில், மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் பலத்த காயங்களுக்குள்ளாகினர்.

பருத்தித்துறையைச் சேர்ந்த அ. யோகராஜா (19 வயது) எஸ். சுபாஸ் (23 வயது) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

இந்த இருவரும் மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எதிரே வந்த டிராக்டர் ஒன்றுக்கு வழி வி— முயன்ற வேளையிலேயே மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானது. (இ-173)

## ஆணைக்குழு அதிகாரி தடுப்பு முகாமுக்கு விஜயம்

யாழ்ப்பாணம், டிசெ. 15

காங்கேசன்துறை பயங்கரவாதத் தடுப்புப்பிரிவு முகாமுக்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அதிகாரி எஸ். சிறீதரன் நேற்று விஜயம் செய்து அங்குள்ள கைதிகளைப் பார்வையிட்டார்.

கைதிகளின் உறவினர்கள் கொடுத்து அனுப்பிய கடிதங்கள் மற்றும் உணவுப்பொருள்களையும் அவர் கைதிகளிடம் வழங்கினார். அவர்களின் கடிதங்களையும் உறவினர்களிடம் கையளிப்பதற்காக எடுத்து வந்தார்.

காங்கேசன்துறை தடுப்பு முகாமிலுள்ள கைதிகளினால் அவர்களது உறவினர்களுக்கு எழுதப்பட்ட கடிதங்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் இருப்பதாகவும் உறவினர்கள் அவற்றை நேரில் வந்து பெற்றுச்செல்லுமாறும் அவர் கேட்டுள்ளார். (ஐ-5)

## மந்திரவாதி கொலை!

மட்டக்களப்பு, டிசெ. 15

அம்பாறை மாவட்டத்தில் மந்திரவாதி ஒருவரைக் கத்தியால் குத்திக்கொலை செய்து விட்டு பொலீஸில் சரண் அடைந்தார் ஒருவர்.

மந்திரவாதியான சுலைமான் லெப்பை ரசீட் என்பவரே இறந்தவர் ஆவார்.

சந்தேக நபரான செய்யது முகமது அப்துல் மஜீத் என்பவர் சிலருக்கு எதிராக மாந்திரீகம் செய்யுமாறு சுலைமான் லெப்பை ரசீட்டைக் கோரினார் என்றும்—

அவர் மறுக்கவே சந்தேகநபர் அவரைக்கத்தியால் குத்திக்கொலை செய்தார் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் சந்தேக நபர் பொலீஸில் சரண் அடைந்து தாம் செய்த கொலை பற்றித் தெரிவித்ததாகவும் பொலீஸார் கூறினர். (இ-3-21)

## வெள்ள வாய்க்கால் திருத்தம்

வடமராட்சி, டிசெ. 15

வல்வெட்டித்துறை நெடியகாடு வெள்ளவாய்க்கால் திருத்தப்பட்டு வருகிறது.

வல்வெட்டித்துறை நகரசபையால் மேற்கொள்ளப்படும் இத்திருத்த வேலையின் முதற்கட்டமாக ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபா செலவில் வெள்ள வாய்க்காலுக்கான சுவர் கட்டப்பட்டு வருகிறது.

இரண்டாம் கட்டமாக மறுபுறத்தில் சுவர் அமைக்கும் வேலைகள் அடுத்த ஆண்டு ஆரம்பிக்கப்படும் என வல்வெட்டித்துறை நகரசபையின் உபதலைவர் எஸ். சந்திரசேகரம் தெரிவித்தார். (இ-173)

## கல்விசார் ஊழியர்களும் நேற்று வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம், டிசெ. 15

யாழ். பல்கலைக் கழக ஊழியர் சங்கம், எழுதுவினைஞர் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒன்றியம் ஆகியவை இணைந்து நடத்தி வரும் வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர், மருத்துவ ஆசிரியர் சங்கத்தினர், விவசாய ஆசிரியர் சங்கத்தினர் நேற்று ஒரு நாள் அடையாளப்போராட்டத்தை நடத்தினர்.

வடக்கு—கிழக்குப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களுக்கு 97-98 ஆண்டுகால இடர்காலக் கொடுப்பனவு உடனடியாக வழங்கப்பட வேண்டும்என்று கோரி கடந்த வெள்ளிக்கிழமை முதல் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தி வருகின்றார்கள்.

இதேவேளை—

இந்தப் பிரச்சினை தொடர்பாக அரசாங்கம் தொடர்ந்து மௌனம் சாதிக்கும் பட்சத்தில் இந்தப் போராட்டம் மேலும் தீவிரமடையும் என்றும்—

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தற்போது இடம் பெற்று வரும் உண்ணாவிரதப் போராட்டம் போன்று நாமும் உண்ணாவிரதத்தில் ஈடுபட வேண்டி வரும் என்றும்—

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் எஸ். கலாராஜா தெரிவித்தார். (ஐ-6)

## முன்னாள் படை அதிகாரிகள் ஐ. தே. கவுக்கு ஆதரவு

கொழும்பு, டிசெ. 15

ஐ. தே. கவுக்கு ஆதரவாக தீவிர அரசியல் பணிகளில் முன்னாள் படை அதிகாரிகள் ஈடுபடுவது தொடர்பாக கொழும்புப் பத்திரிகைகள் விசனம் தெரிவித்துள்ளன.

பிரதிப் பொலீஸ் மா அதிபராக இருந்த பிரேமதாஸ உடுகம்பொல, பொலீஸ் அத்தியட்சகராக இருந்த நிசாம், இராணுவ உயர் அதிகாரி லக்கி அல்கம போன்றோர் ஐ.தே.கவுக்கு ஆதரவாகத் தீவிர அரசியலில் ஈடுபட்டுள்ளனர். (இ-3-10)

## யாழ். செயலகத்தில் வாக்காளர் இடாப்பு படிவம் தட்டுப்பாடு

கொழும்புத்துறை, டிசெ. 15

யாழ். செயலக தேர்தல் திணைக்களத்தில் வாக்காளர் இடாப்பு பதிவு இலக்கம் எடுப்பதற்கான படிவம் முடிந்து விட்டது.

இத்திணைக்களத்துக்கு வாக்காளர் இடாப்பு பதிவு இலக்கம் பெற பொதுமக்கள் சென்றால் விண்ணப்பப்படிவம் முடிந்துவிட்டது, கொழும்பில் செயற்படும் தலைமைச் செயலகத்தில் இருந்து படிவம் வரவேண்டுமென ஊழியர்கள் கூறுகிறார்களாம். (இ-30)

12 - 12 - 1998 முதல் 01 - 01 - 1999 வரை

மாபெரும் மலிவு விற்பனை

தரமான தெரிவுகளுக்கு முந்துங்கள்!

★ சிவா புடவை அகம் ★

இல. 27, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். (61338)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் கல்வி அமைச்சருடன் டக்ளஸ் இன்று சந்திப்பு

யாழ்ப்பாணம், டிசெ.15

ஈ. பி. டி. பி. அமைப்பின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா இன்று கல்வி உயர்கல்வி அமைச்சர் ரிச்சாட்பத்திரானவையும் ஜனாதிபதியின் செயலாளர் கே. பாலபட்டபென்டியையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது வடக்கு — கிழக்கில் உள்ள பல்கலைக் கழகங்களின் ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய இடர்காலக் கொடுப்பனவு தொடர்பாக இணக்கம் ஒன்றைக் காண்பது பற்றி முக்கியமாகத் தாம் பேச்சு நடத்த இருப்பதாகத் திரு. தேவானந்தா உதயனுக்குத் தெரிவித்தார்.

அத்துடன் யாழ். மருத்துவ பீடத்துக்கு மேலும் 25 பேரைச் சேர்த்துக் கொள்ளுதல், 1996 இல் பட்டம் பெற்று வெளியேறிய பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்குதல், பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குதல், செம்மணிப் புதைகுழி விவகாரம், மற்றும் காங்கேசன்துறை சிமெந்து ஆலையை மீள இயக்குதல் ஆகிய விடயங்கள் குறித்தும் இன்றைய சந்திப்பின்போது பேச்சு நடத்த உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-6)

## தாக்குதல்...

(முதலாம் பக்கத்தொடர்)

ஸார் எவரும் காயமடையவில்லை என்றும், ஊர்காவற்படை உறுப்பினர் ஒருவரின் ரீ-56 ரகத் துப்பாக்கியை புலிகள் அபகரித்துச் சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-21-6)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்)

தலைக் கூட்டணி யாழ். மாநகர சபை உறுப்பினர்களான எஸ். சின்னத்துரை, எஸ். அரவிந்தன், கே. முகுந்தன், எஸ். கணேந்திரன் ஆகியோர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர்.

இதேவேளை—

யாழ். மாநகர சபையின் பிரதிமேயர் என். ரவிராஜ் தற்பொழுது லண்டன் சென்றுள்ளதால் அவர் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளமாட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இக் கூட்டத்தின் பின்னர் எதிர்வரும் ஜனவரி மாதமளவில் யாழ். மாநகர சபையின் புதிய மேயர் மற்றும் பிரதி மேயர் ஆகியோர் பதவியேற்பார்கள் என்றும் தெரிய வருகிறது. (ஐ-5)

## 2 தங்கப்...

(முதலாம் பக்கத் தொடர்)

தமயந்தி தர்ஷா 51. 57 செக்கன்களிலும்—

சுகத் திலகரட்ன 44. 99 செக்கன்களிலும்— 400 மீற்றர் தூரத்தை ஓடிக் கடந்தனர்.

25 ஆண்டுகளுக்குப்பின்னர் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தற்போதே இலங்கைக்குத் தங்கப் பதக்கம் கிடைத்துள்ளது.

இதேவேளை—

இந்த போட்டியில் இலங்கைக்கு தங்கப்பதக்கம் பெற்றுத்தருவார் என எதிர்பார்க்கப்பட்ட சுசந்திகா ஜெயசிங்க அரையிறுதிப் போட்டியின்போது காலில் ஏற்பட்ட சுளுக்கு காரணமாக இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளவில்லை.

(முன்னர் வந்த செய்தி 4 ஆம் பக்கத்தில்) (ஐ-6)

## பயணிகள் வந்தனர்

திருகோணமலையில் இருந்து 'லங்கா முடித்த' கப்பல் மூலம் நேற்று முன்தினம் வந்து சேர்ந்த பயணிகளில் காங்கேசன்துறையில் தங்கி நின்ற எஞ்சிய அனைவரும் நேற்று முற்பகல் யாழ். வந்தடைந்தனர்.

வழமையான சோதனை நடவடிக்கைகளுக்காக காங்கேசன்துறை பட்டின சபை மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த இவர்கள் வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்கள் மூலம் நகருக்கு அழைத்து வரப்பட்டனர்.

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்)

படையினரின் சூட்டுக்கு இலக்கான திமிங்கிலம், சூட்டுக்காயங்களுடன் அடுத்த நாள் காலையில் கரை ஒதுங்கியது என்றும்—

கொழும்புப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டது.

கடலிலேயே இந்தத் திருவிழா என்றால் தலைநகரில் புலிகளின் விமானம் பற்றிய கிலி எத்தகைய திருவிழாவுக்கு இடம் வைக்குமோ என்று கேள்வி எழுப்பியுள்ளது அப்பத்திரிகை. (உ-6)

## கூட்டணி...

(முதலாம் பக்கத் தொடர்)

படவில்லை என்றும் —

கூட்டணி வட்டாரங்களில் இருந்து கிடைத்த தகவல்களை வைத்துக் கொண்டு நேற்றைய உதயனில் செய்தி ஒன்று பிரசுரிக்கப்பட்டது.

அந்தச் செய்தி குறித்து கருத்து வெளியிட்டபோதே யாழ். நகரப் படை வட்டாரங்கள் மேற்படி தகவலைத் தெரிவித்தன.

''சம்பந்தப்பட்ட கட்டடத்திலிருந்து சுமார் இருபத்தைந்து யார் தொலைவுக்கு அப்பால் கிரனேட் வீழ்ந்து வெடித்துள்ளது. படையினரின் கிரனேட் ஏதும் தவறுதலாக விழுந்து வெடித்தது என்று கூறுவது முற்றிலும் பிழையானது. வெளியிலிருந்து வீசப்பட்ட குண்டே இது. இவ்விவகாரம் குறித்து விரிவான விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது. சிலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்'' — என்று படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ நேரம் கூட்டணி அலுவலகத்தில் இருந்த எவரும் விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை என்று தெரிய வந்தது. (உ)

## கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்)

தது.

'லங்கா முடித்த' கப்பல் மூலம் நாளை சுமார் ஆயிரம் பயணிகளை அழைத்துச் செல்ல ஏற்பாடாகியுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை—

கப்பலில் பிரயாணம்செய்யவுள்ள பயணிகளின் நலன் கருதி தாதி உத்தியோகத்தர் ஒருவரை முதலுதவிப் பொருள்களுடன் கப்பலில் அனுப்ப ஏற்பாடு செய்யுமாறு யாழ். ஆஸ்பத்திரிப் பணிப்பாளரை யாழ். சிவில் நிர்வாகப் பகுதியினர் கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் யாழ். ஆஸ்பத்திரியில் இருந்து மருத்துவக் குழு ஒன்றை காங்கேசன்துறைக்கு அனுப்புவதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-6-139-173)

## வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்)

தெரிவித்த சில வட்டாரங்கள்—

புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அண்மையில் தாம் நிகழ்த்திய மாவீரர் தின உரையில் மக்கள் மீதான அன்றாட நெருக்குதல்கள் நீக்கப்பட்ட நிலையில் பேசுவது குறித்து ஆராயலாம் என்று தெரிவித்ததையும் சுட்டிக் காட்டின.

வன்னிப் பகுதியில் விதிக்கப்பட்டுள்ள நிவாரண வெட்டைத் தளர்த்துவது குறித்து ஒபடகேயின் வன்னி விஜயத்தை அடுத்து அறிவிக்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஈ. பி. டி. பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா இன்று ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபென்டியைச் சந்திக்கும் போது இது விடயம் குறித்து பேசவிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-6)

## எழுதுநர்...

(முதலாம் பக்கத்தொடர்)

ஆள்களைச் சேர்ப்பதற்கான பொதுப் போட்டிப் பரீட்சைக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கடந்த 4 ஆம்திகதிய்வர்த்தமானியில் இது பற்றிய தகவல்கள் பிரசுரமாகியுள்ளன. விண்ணப்ப முடிவு தினம் ஜனவரி 29 ஆம் திகதியாகும்.

உள்ள வெற்றிடங்களில் வலது குறைந்த நபர்களுக்கு 3 வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. போட்டிப் பரீட்சையில் தோற்றி உரிய புள்ளி மட்டத்தை அடைவோரில் முதல் நிலையில் இருக்கும் வலது குறைந்தோருக்கு இந்த சேவை வாய்ப்பு வழங்கப்படும்.

இந்தப் பரீட்சை நடத்தப்படுவதுடன் இதற்கு முன்னர் அரசாங்க எழுதுநர் சார்ந்த சேவைகளுக்கு ஆள்சேர்ப்பதற்கென நடத்தப்பட்ட அனைத்துப் பரீட்சைகளின் பெறுபேறுகளும் காலம்கடந்ததாகக் கருதப்படும் என்றும் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத்தடவைஇப்பரீட்சை தொடர்பாக புதிய ஏற்பாடு ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. முன்னர் நடத்தப்பட்ட பரீட்சைகளின் போது பரீட்சைப் பெறுபேறுகளை மீளாய்வு செய்ய வசதி செய்யப்பட்டிருக்கவில்லை.

ஆனால் தற்போது நடைபெறும் பரீட்சையின் முடிவுகள் தொடர்பாக அவை வெளியாகி அடுத்த ஒரு மாதத்துக்குள் பரீட்சைத் திணைக்களத்துக்கு விண்ணப்பித்து மேன் முறையீடு செய்யலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆள்சேர்ப்புப் போட்டிப் பரீட்சை தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை அலுவலக நேரத்தில் 'உதயன்' பணிமனையில் பார்வையிடலாம். (உ-6)

## நீச்சல் முகாமையாளர் மரணம்

கொழும்பு, டிசெ. 15

பாங்கொக்கில் நடைபெறும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் இலங்கை நீச்சல் அணியின் முகாமையாளர் நேற்று மாலை மாரடைப்பால் காலமானார்.

அவரது சடலம் நேற்றிரவு விமானம் மூலம் கொழும்புக்கு கொண்டுவரப்பட இருந்தது. (ஐ-6)

## ஜெப ஆலய...

(முதலாம் பக்கத் தொடர்)

6 மணியளவில் அவர் கத்தி வெட்டுக்கு இலக்கானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் 3 ஆம் திகதி இரவு இருபாலையில் உள்ள கானான் ஜெப ஆலயப்போதகர் ஸ்ரீபன் சிவனோ ஸ்ரீதரன் இதே போன்று அவரது படுக்கையில்வைத்து மர்மமானசூழ் நிலையில் வெட்டிக் கொலை செய்யப்பட்டது தெரிந்ததே.

அவரது சடலத்தில் இடது காதின் கீழ்ப்புறத்திலேயே ஆழமான கத்தி வெட்டுக் காயம் காணப்பட்டது.

வட்டுக் கோட்டையில் நேற்று இடம்பெற்ற சம்பவமும் ஜெப ஆலயப் போதகரை இலக்கு வைத்தே நடத்தப்பட்டிருக்க வேண்டும் என்றும் —

ஆனால் சம்பவம் நடந்த சமயம் அவர் அங்கு தங்கியிருக்காததால் இலக்குத் தவறிவிட்டது என்றும் —

ஜெப ஆலய வட்டாரங்கள் சந்தேகம் தெரிவித்தன.

இருபாலையிலும், வட்டுக் கோட்டையிலும் இடம்பெற்றுள்ள ஒரே பாணியிலான இந்த இரு கத்தி வெட்டுச் சம்பவங்களும் கானான் ஜெப ஆலய சமூகத்தினரிடையே பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. (ஐ-15-173)


வந்துவிட்டது!

தேவைகளுக்கு முந்துங்கள்!

லீலா பஞ்சாங்க கலண்டர்கள்

தொடர்பு:

உதயன் பணிமனை

361, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

எமது ஒறிஜினல் வீடியோ CD வெளியீடுகள்!

★ அண்ணன் ★ என் அண்ணன்
★ கோகுலம் ★ சாந்தி
★ திருமூர்த்தி ★ ராஜரிஷி
★ சேனாதிபதி ★ புனர்ஜென்மம்
★ நான் அடிமை இல்லை ★ திருமலை தென்குமரி
★ மகராசன் ★ உரிமைக் குரல்
★ சூரசம்ஹாரம் ★ இதயக்கனி
★ ராசய்யா ★ பணத்தோட்டம்
★ அவதாரம் ★ தங்க மகன்
★ பெரிய தம்பி ★ ராணுவ வீரன்
★ வண்டிச்சோலை சின்ராசு ★ சில நேரங்களில் சில மனிதர்கள்
★ அலைகள் ஓய்வதில்லை ★ அமராவதி
★ இரட்டை ரோஜா

புதிய ஓடியோ CD வெளியீடுகள்!

★ எதிரும் புதிரும் ★ தேசியகீதம்
★ என்றென்றும் காதல் ★ சிட்டி பஸ்
★ முரடன் ★ போலீஸ் கில்லாடி
★ காதல் கவிதை

என்றென்றும் தரமான வீடியோ, ஓடியோ நேரடி CD பதிவுகளுக்கு

சுப்ப ஷோ

வீடியோ, ஓடியோ சென்ரர்

யாழ்ப்பாணம்

(சி/5800)

எமது பிரமிட் CD வெளியீடுகள்!

உயிரோடு உயிராக
அபூர்வ ராகங்கள்
இளமை ஊஞ்சலாடுகிறது
ஆத்மா
அரண்மனைக் கிளி

வீடியோ விமல்

யாழ்ப்பாணம்.

(சி/5798)

விற்பனையாகின்றது

அரசாங்க பொது எழுதுவினைஞர் சேவை, சிறாப்பர் சேவை, கணக்குப் பதியுநர் சேவை, களஞ்சியக் காப்பாளர் சேவை, சுகாதார எழுதுநர் சேவை, புகைவண்டி நேரம் பதியுநர் - எழுதுநர் சேவை, புகையிரத நிலைய அதிபர் ( வகுப்பு II ), நீதித்துறை எழுதுநர் சேவை ஆகியவற்றுக்கு ஆள்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குரிய விண்ணப்பப்படிவங்கள் ( ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தனித்தனியாக ) விற்பனையாகின்றன.

படிவம் ஒன்றின் விலை: ரூபா 2-50

விண்ணப்ப முடிவு திகதி: 1999 ஜனவரி 29

வர்த்தமானி பார்வைக்கு உண்டு.

பாரதி பதிப்பகம்

430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(சி/5799)


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15 12 1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org